விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 24 வியாழக்கிழமை (09.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 233

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில் dishtv
கிடைக்கும்
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியரிஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3468)

## கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்ற

# 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது!

## அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் 20-வது திருத்தச்சட்டமூலத்தை கொண்டு வரவுள்ளதாக சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று புதன்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போதே சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (23-ம் பக்.)



### வாள்வெட்டுக்குழு கட்டுடை பகுதியில்
## வீட்டின் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி சேதப்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்

இச்சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற் 24

## அரசு தொடர்பில் மக்கள் அதிருப்தி
### அமைச்சர் ரணதுங்க

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தினால் தற்போதைய அரசாங்கம் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று காலை அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மஹா 23

### வாள்வெட்டு குழுவில் இருவர் கைது
## சக நண்பர்களை சிறையில் பார்க்க சென்ற போது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவில் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள வாள்வெட்டுக் குழுக்களின் சந்தேகநபர்களை யாழ் சிறையில் பார்க்கச் சென்ற இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். 23

### வட்டுக்கோட்டை அராலி பகுதியில்
## இளைஞர்களுடன் இணைந்து பொலிஸார் ரோந்து பணி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-அராலி பகுதியில் குடியிருப்புகளுக்குள் புகுந்து மக்களைப் பீதிக்குள்ளாக்கும் இனந்தெரியாத நபர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உள்ளூர் இளைஞ 24

## வடக்கு வீட்டுத்திட்டம் குறித்து இரா.சம்பந்தனுடன் பேச்சு
### பாராளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

வடக்கில் வீட்டுத் திட்டம் அமைப்பது குறித்து எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி தீர்மானம் எடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கில் வீட்டுத் 24

## எரிபொருள் விலை அதிகரிக்கும் அபாயம் - பிரதமர் ரணில்

(கொழும்பு)

ஈரானுக்கு எதிராக பொருளாதார தடையை அமெரிக்கா மீண்டும் விரிவுபடுத்தியுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார். 24

## தொண்டையில் பாண் சிக்கி முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

தோட்டத்துக்கு சென்று வீடு திரும்பிய முதியவர் பாண் சாப்பிட்டுள்ளார். அது தொண்டையில் சிக்கியதில் முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி மறுவன்புலவு பகுதியில் நேற்று பிற்பகல் 24

## ஒரு வாரத்தில் மூன்றாம் முறை திருடர்கள் தொடர்ந்து கைவரிசை
### செம்மணி வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)


கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் நேற்று புதன்கிழமை ஒரு வாரத்தில் மூன்றாம் முறையாக திருடர்கள் தொடர்ந்து தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

வீட்டின் பின் கதவு உடைக்கப்பட்டு திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டின் உரிமையாளர் காலை வீட்டைப்பூட்டி விட்டு வேலைக்கு சென்று மாலை வீடு திரும்பியிருந்த வேளை வீட்டின் பின்கதவு மர்ம முறையில் உடைக்கப்பட்டு இருந்ததைக்கண்டு அயலவருக்கு தெரியப்படுத்தியதோடு கோப்பாய் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவ இடத்திற்கு 24

### நீதிமன்ற அவமதிப்பு வழக்கு
## ஞானசார தேரருக்கு 19 வருட கடூழிய சிறை



(கொழும்பு)


நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஞானசார தேரருக்கு 19 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. (விரிவான செய்தி 5-ம் பக்கம்...)

### மதுபானத்தின் விலை
## 40 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு மதுபானம் ஒரு போத்தலின் விலை 40 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என 24

## இலட்சக்கணக்கான தொண்டர்கள் கண்ணீர் மல்க கருணாநிதி நல்லடக்கம்
### கூட்ட நெரிசலில் இருவர் பலி; பலர் படுகாயம்



(சென்னை)

கலைஞர் கருணாநிதியின் உடலம் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

மறைந்த திராவிட முன்னேற்றக்கழக தலைவர் கருணாநிதியின் உடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ராஜாஜி அரங்கத் 23

## யுத்தத்தால் வெளியேறியோர் நாட்டுக்கு திரும்ப வேண்டும்
### பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் நாட்டில் இருந்து வெளியேறிச் சென்ற அனைவரும் நாடு திரும்ப வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமருடன் வாய்மூல 23









## முதலமைச்சர் விக்னேஸ்வரனை
# கொழும்பு நீதிமன்றில் ஆஜராக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனால் முதலமைச்சருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் விக்னேஸ்வரனை எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்களான கந்தையா சிவநேசன், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரை வரும் 7ஆம் திகதி நீதிமன்றில் தனித்தனியே முன்னிலையாகுமாறு அந்த அறிவித்தல் மேன்முறையீட்டு நீதிமன்றினால் நேற்று வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தம்மை பதவியில் இருந்து நீக்கியது தவறு என்று உத்தரவிடக் கோரி, முன்னாள் மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு மீதான இடைக்காலக் கட்டளை கடந்த ஜூன் மாதம் வழங்கப்பட்டது. சட்டப்படி பா.டெனீஸ்வரன் அமைச்சுப் பதவியில் நீடிப்பதால், அவரது அமைச்சுப் பதவிகளை வகிப்போர் அவற்றை விடுவிக்க வேண்டும் என்று நீதிமன்று இடைக்கால கட்டளை வழங்கியது.

நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, ஜானக டி சில்வா ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த கட்டளையை வழங்கியது. டெனீஸ்வரனின் துறைகளில், போக்குவரத்து அமைச்சு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் உள்ளது. (ம-101.9)

# இ.போ.ச பணியாளர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

ஓய்வு பெற்ற தொடருந்து இயந்திர சாரதிகளை இன்று காலை 6.00 மணிக்கு சேவைக்கு சமுகமளிக்குமாறு தொடருந்து திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

இதனுடன் தொடருந்து பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவடையும் வரை இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

வேதன பிரச்சினையை முன்னிறுத்தி சில தொடருந்து தொழிற்சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் 3.00 மணி முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் தொடருந்து நிலைய அதிபர்கள், கட்டுப்பாட்டாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் இயந்திர சாரதிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 48 வகை மருந்து வகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதால்
## நோயாளர்களுக்கு 4.4 பில்லியன் ரூபா நிவாரணம்

(கொழும்பு)

48 வகை மருந்து வகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளமையினால், 4.4 பில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணம் நோயாளர்களுக்குக் கிடைத்துள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் கயந்த கருணாதிலக்க இதனை குறிப்பிட்டார்.

மேலும், கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், 48 அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டதோடு, அதில் வெவ்வேறு வர்த்தக பெயர்களைக் கொண்ட 272 மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஊடகவியலாளர்களின் தொலைபேசி அழைப்பு ஒட்டுக்கேட்கப்படுகின்றன
## ஒன்றிணைந்த எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் சில பொலிஸாரினதும், ஊடகவியலாளர்களினதும் தொலைபேசி அழைப்புக்களை சட்டவிரோதமான முறையில் ஒட்டுக்கேட்டு வருவதாக ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதற்காக நுகேகொட பகுதியில் பொலிஸ் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான விசேட தொழிநுட்ப கருவிகள் ஜப்பானிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொரளை, என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நல்லாட்சி அரசாங்கமானது தற்போது சில பொலிஸாரினதும், ஊடகவியலாளரினதும் தொலைபேசி அழைப்புக்களை இரகசியமாக ஒட்டுக்கேட்டு வருகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்போரின் அழைப்புக்கள் மாத்திரமே இவ்வாறு சட்டவிரோதமாக ஒட்டுக்கேட்கப்படுகிறது. இந்தப் பட்டியலில், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்காக நுகேகொட பகுதியில் விசேட பொலிஸ் குழுவொன்றையும் அரசாங்கம் ஸ்தாபித்துள்ளதோடு, ஒட்டுக்கேட்கும் கருவிகளை ஜப்பானிடமிருந்து கொள்வனவும் செய்துள்ளது.

இவ்வாறு நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் தற்போது ஜெர்மனிய நாசிப் படையினரின் நிர்வாக செயற்பாடுகளை போலவே காணப்படுகின்றன.

அரசாங்க அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் ஆட்சியாளர்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியினராகிய நாம் தீவிரமாக கண்காணித்துக்கொண்டு தான் இருக்கிறோம் என குறிப்பிட்டுள்ளார். (ம)


# பருத்தித்துறை பிரதேச சபை கேள்வி அறிவித்தல்கள்

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் விபரங்களுக்கு அமைவாக துவிச்சக்கரவண்டி மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்களை குறித்த காலப்பகுதியில் நடாத்துவதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1.வல்லிபுர ஆழ்வார் வருடாந்த மகோற்சவம் 2018 இன் போது 09.09.2018 தொடக்கம் 25.09.2018 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடங்கள்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலயசுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு வடக்குப்புறம் | 142,750.00 | 200.00 | 1000.00 |
| 02 | முறாவில்வீதியில்குருக்கட்டு பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறம் | 21,450.00 | 200.00 | 1000.00 |
| 03 | ஆலயசுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணிவீதியில் கோவிலுக்கு தெற்குப்புறம் | 68,200.00 | 200.00 | 1000.00 |

2.நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 2018 இன் போது 25.09.2018 தொடக்கம் 29.09.2018ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடம்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலயசுற்றாடல் நாகர்கோவில் | 12,900.00 | 200.00 | 1000.00 |

1.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-09.08.2018 தொடக்கம் 23.08.2018 மு.ப 10.00 மணி வரை
2.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:-23.08.2018 மு.ப 10.30 மணிவரை
3.கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:-23.08.2018 மு.ப 11.00 மணி

கேள்விநிபந்தனைகள்:-

1.கேள்விப்படிவங்களை அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வல்லிபுரஆழ்வார் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகனபாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேச சபை, புலோலி உப அலுவலகத்திலும் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகனபாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேச சபை, குடத்தனை உபஅலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

2.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையில் இடப்பட்டு உறையினது இடது பக்கமேல் மூலையில் கேள்வி விபரம் தெளிவாக எழுதப்படுவதுடன் தபால் உறைக்கு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 23.08.2018 மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும். மறு பிரதியை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் ஊடாகவோ உரிய காலப்பகுதிக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

3.கேள்விதிறத்தலின் போதுகேள்விகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.

4.இதுவிடயமான மேலதிக விபரங்கள், ஏனைய நிபந்தனைகளை காரியாலயத்திலும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலும் காரியாலயநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.

(சி-3469) 08.08.2018


# கலைஞர் கருணாநிதிக்கு மெரினாவில் இடம் ஒதுக்கவும்

## தமிழக அரசிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

**சென்னை மெரினா கடற்கரையில் கலைஞர் கருணாநிதியின் உடலை அடக்கம் செய்ய இடம் ஒதுக்குமாறு தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவு பிறப்பித்தது.**

தி.மு.க. தலைவர் கருணாநிதியை சென்னை மெரினா கடற்கரையிலுள்ள அண்ணா சமாதி அருகே அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என தி.மு.க. தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.



ஆனால், மெரினாவில் நினைவிடம் ஒதுக்குவதில் பல சட்ட சிக்கல்கள் உள்ளதால், சென்னை காந்தி மண்டபம் அருகே 2 ஏக்கர் நிலம் ஒதுக்க அரசு தயாராக இருப்பதாக தலைமைச் செயலாளர் அறிவித்தார்.

தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம் பொறுப்பு தலைமை நீதிபதி ஹுலு வாடி ரமேஷிடம் தி.மு.க. சார்பில் முறையிடப்பட்டது.

இந்த மனு மீது நேற்று விசாரணை நடைபெற்றது.

அப்போது அரசு தரப்பு மற்றும் தி.மு.க. தரப்பு சட்டத்தரணிகள் கார்சாரமாக வாதிட்டனர்.

அப்போது சட்ட சிக்கல்கள், வழக்கு நிலுவை என்றீர்கள்? இப்போது வழக்குகள் இல்லாததால் எதிர்ப்பது ஏன்? என அரசுத் தரப்புக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

காமராஜருக்கு நினைவிடம் அமைக்க மெரினாவில் இடம் கோரவில்லை என்றும், ஜானகியம்மாள் இறந்த போதும் முறையான அனுமதி கோரப்படவில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

எனினும் பல்வேறு காரணங்களைக் கூறிய அரசு தரப்பு சட்டத்தரணிகள் கருணாநிதிக்கு மெரினாவில் இடம் ஒதுக்க முடியாது எனத் தொடர்ந்தும் வாதிட்டனர். தி.மு.க. தரப்பும் எதிர்வாதம் செய்தது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள் தீர்ப்பை வாசித்தனர். அப்போது, தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடலை அடக்கம் செய்ய மெரினாவில் இடம் ஒதுக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தனர். (இ-7)








தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் உடலுக்கு பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்கள் நேற்று நேரில் அஞ்சலி செலுத்தினர். (மேலும் படங்கள் செய்திகள் 12-13ஆம் பக்கங்களில்)

# கலைஞர் கருணாநிதியின் மறைவுச் செய்தி கேட்டு தமிழ் கூறும் நல்லுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இரங்கல்



(யாழ்ப்பாணம்)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் தமிழ் கூறும் நல்லுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. கலைஞர் கருணாநிதி அவர்கள் தனது 95 ஆவது அகவையில் முதுமையின் நியதிக்கு ஏற்பவே காலமாகியுள்ளார்.

எனினும் அவர் தமிழ் மக்களின் கருத்தியலிலும், தமிழக அரசியலிலும், தமிழ்க் கலை இலக்கியத்திலும் ஆற்றிய மகத்தான பணிகளும் நிகழ்த்திய சாதனைகளும் அவரை மறக்க முடியாத மனநிலைக்கு எம்மை ஆழ்த்தியுள்ளன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் சுமார் 60 ஆண்டு காலம் தொடர்ந்து மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். 5 தடவைகள் முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

இது சாதாரணமான ஒரு நிகழ்வல்ல. நவீன இந்திய அரசியல் வரலாற்றில் இவருக்கு தனித்துவமான ஒரு வரலாறு அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தனது ஆட்சிக்காலத்தில் சமூக ரீதியின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கிக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் அடித்தட்டு மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தார். அரசுப் பணிகளில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லை என்று நம்புகின்றேன்.

இந்தியாவில் முதன் முறையாக பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தையும் நிறைவேற்றினார் கலைஞர் அவர்கள். தன்னால் இயன்ற அளவு மத்தியின் ஆதிக்கத்தை மாநிலத்தில் நிலைகொள்ள விடாது தடுப்பதற்காக அவர் உழைத்தார். தொழில் துறையில் மத்திய ஆதிக்கத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் மத்திய மாநில தனியார் கூட்டு முதலீட்டுத் திட்டங்களை உருவாக்கினார்.

மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் போன்று மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினார். தகவல் தொழில் நுட்பத்துறை ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதை முன்கூட்டியே கணித்து இந்திய நாட்டிலேயே முதல் முறையாகத் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார்.

தமிழ்மொழி மீது தீராப் பற்று மிக்க கலைஞர் கருணாநிதி அவர்கள், தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர்களுக்குப் பணி நியமனங்களில் 20 சதவீதம் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்தார். தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்ததோடு, செம்மொழித் தமிழ் ஆய்வுக்காகச் சென்னையில் மத்திய நிறுவனம் ஒன்றையும் உருவாக்க வழி வகுத்தார்.

இணைய உலகில் தமிழ் முன்னே நிற்க விதை போடும் நிகழ்ச்சியாக உலகத் தமிழ் இணைய மாநாட்டைக் கூட்டினார். கேட்கும் தோறும் உணர்வு முறுக்கேறும் "நீராடும் கடலுடுத்த" என்ற மனோன்மணியம் பெ.சுந்தரனாரின் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக்கியவரும் இவரே.

கலைஞர் கருணாநிதி அவர்கள் 1956இல் சிதம்பரத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டில் "இலங்கையில் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார். அன்றில் இருந்து இலங்கைத் தமிழர்களுக்காக அவர் எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.



எனினும், முள்ளிவாய்க்காலில் தமிழ் இன அழிப்பு யுத்தம் உக்கிரம் பெற்றிருந்த போது கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்குக் கூடுதல் அழுத்தம் கொடுத்து அழிவைத் தடுத்திருக்க முடியும் என்ற ஆதங்கம் எம் மக்கள் மத்தியில் இன்றும் உண்டு.


தன் வாழ்வைத் தமிழர் வரலாற்றின் அத்தியாயங்களாகப் பதிவு செய்து விட்டு மறைந்துள்ள கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் என் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் அவரது இலட்சோப இலட்சம் தொண்டர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கன்னியாகுமரியில் வானுயர அமைந்திருக்கும் திருவள்ளுவர் சிலை போன்று அவர் பெயரும் காலாகாலத்துக்கும் நிலைத்திருக்க இறைவன் அருள் புரிவானாக! என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# லோர்ட்ஸ் ராசி தொடருமா?

## இங்கிலாந்து - இந்தியா இன்று இரண்டாவது மோதல்




இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

கடந்த 2014ல் இங்கு வெற்றி பெற்ற ராசி இந்திய அணிக்கு கைகொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

பேர்மிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் பெரிய எதிர்பார்ப்புடன் களமிறங்கிய 'நம்பர் 1' இந்திய அணி கடைசியில் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பல் காரணமாக 31 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இதனால் தொடரில் 1-0 என பின் தங்கியுள்ளது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று லண்டன். லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

முதல் போட்டியில் அணித் தலைவர் ஹோலி (149, 51) தவிர மற்றைய எந்த வீரரும் பெரியளவில் ஓட்டங்களை எடுக்கவில்லை.

இத்னால் இன்று கூடுதலாக துடுப்பாட்ட வீரர் சேர்க்கப்படலாம் என எதிர் பார்க்கப்பட்டது. இருப்பினும் இந்திய அணி வழக்கமான ஐந்து புந்துவீச்சாளர்கள் என்ற 'போர்முலாவுடன்' களமிறங்கும் என பயிற்சியாளர் பரத் அருண் தெரிவித்தார்.

**புஜாரா வருவாரா?**

இதனால் ஆரம்ப வீரர்கள் ஷிகர் தவான் (26, 13 ஓட்..), முரளி விஜய் (20, 6) இணைந்து பொறுப்பான ஆட்டத்தை தர வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

'நடுத்தர வரிசையில்' புஜாராவுக்குப் பதில் லோகேஷ் ராகுல் (4, 13) சேர்க்கப்பட்டது பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. இன்று புஜாரா வரும் பட்சத்தில் தவான் அல்லது ராகுல் என யாராவது ஒருவர் இவருக்கு வழிவிடலாம்.

அடுத்து வரும் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் (0, 20) கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த மறுக்கிறார். இதேபோல 'சகலதுறை வீரர்' என்ற போர்வையில் உள்ள பாண்ட்யாவும் (22, 31) தொடர்ந்து ஏமாற்றுவது, பின் வரிசை துடுப்பாட்டத்தை பலவீனப் படுத்தியுள்ளது.

**இரண்டு 'சுழல்'**

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான ஆடுகளத்தில் காணப்படும் புற்கள் வரும் நாட்களில் வெயில் காரணமாக காய்ந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் பந்து நன்றாக சுழலும் என நம்புவதால் இந்திய அணியில் இஷாந்த் சர்மா, மொஹமட் ஷமி மற்றும் பாண்ட்யா என இரு வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டும் சேர்க்கப்படுவர்.

இதனால் பேர்மிங்காமில் 7 விக்கெட்டுக்கள் வீழ்த்திய அஷ்வினுடன் கூடுதலாக ஒரு சுழல் வீரர் இணைய காத்திருக்கிறார்.

கடந்த 2014ல் இங்கு முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஜடேஜா இரண்டாவது இன்னிங்சில் சொதப்பினார்.

ஆனால் துடுப்பாட்டத்தில் இவர் எடுத்த 68 ஓட்டங்கள் இந்திய அணியின் வெற்றிக்கு உதவியாக இருந்தது.

அதேநேரம் பயிற்சியில் சிறப்பாக செயல்பட்ட புதிய வரவு குல்தீப் யாதவுக்கு ஹோலி முக்கியத்துவம் தருவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

**ஸ்ரோக்ஸ் இல்லை**

வழக்கு சிக்கல் காரணமாக சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ் (27 ஓட்., 6 விக்..) இந்த டெஸ்டில் பங்கேற்க முடியாதது இங்கிலாந்து அணிக்கு சிக்கல் தான்.

தவிர 'சீனியர்' குக், அஷ்வின் பந்துகளில் போல்டாவதும் அணித் தலைவர் ஜோ ரூட்டுக்கு ஏமாற்றம் தருகிறது. மற்றபடி ஜென்னிங்ஸ், பேர்ஸ்டோவ் நம்பிக்கை கொடுக்கலாம்.

வேகப்பந்து வீச்சில் வழக்கம்போல அண்டர்சன், ஸ்ருவேர்ட் பிரோட், இளம் வரவு சாம் கர்ரன் கூட்டணி தொடர்கிறது. 'சுழலில்' அடில் ரஷித்துடன், மொயீன் அலி அணிக்கு திரும்பலாம்.




### 2

இந்தியா, இங்கிலாந்து அணிகள் லோர்ட்ஸில் 17 முறை மோதின. இதில் இந்தியா 2ல் மட்டும் (1986, 2014) வென்றது. 4 போட்டி 'சமன்' ஆக, இங்கிலாந்து அணி 11 ல் வெற்றி பெற்றது.

### 36

இந்திய டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பை ஹோலி 2014 ல் பொறுப்பேற்றார். இதுவரை 36 போட்டிகளில் களமிறங்கினார். இதில் களமிறங்கிய 11 வீரர்கள் கொண்ட அணி, 36 முறையும் மாற்றப்பட்டன. இன்றும் இது தொடரும் எனத் தெரிகிறது.

**மழை வருமா?**

லோர்ட்ஸில் முதல் நாளான இன்று வானிலை மேகமூட்டமாக காணப் படும். மதியம் உணவு இடைவேளைக்குப் பின் மழை வர 33 சதவீதம் வாய்ப்புள்ளது. அடுத்த மூன்று நாட்களுக்கு நன்கு வெயில் அடிக்கும். கடைசி மற்றும் ஐந்தாவது நாள் மதியம் மழை வரலாம்.

**பந்து சுழலுமா?**

சமீபகாலமாக லார்ட்ஸ் ஆடுகளம் சுழலுக்கு நன்கு கைகொடுக்கிறது. 2013க்குப் பின் பல்வேறு அணிகளின் சுழற்பந்து வீச்சாளர்கள் 9 முறை 4 அல்லது அதற்குமேல் என விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளனர்.

ஆனால் இந்திய அணியின் சுழல் வீரர்கள் மட்டும் ஏனோ வரிசையாக சொதப்பி வருகின்றனர். கும்ளே மட் டும் 3 டெஸ்டில் 12 விக்கெட் வீழ்த்தினார். ஜடேஜா (1ல் 3 விக்..), ஹிர்வானி (1ல் 2 விக்..), ஹர்பஜன் சிங் (1ல் 1 விக்..) எல்லாம் மோசமாக செயல்பட்டுள்ளனர்.

## ஹோலிதான் பெஸ்ட்

### தல தோனி பாராட்டு

" இந்திய அணித் தலைவர் ஹோலி ஏறக்குறைய 'ஜாம்பவான்' நிலையை அடைந்து விட்டார்." என தல தோனி தெரிவித்தார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் பேர்மிங்காமில் நடந்தது.

இதில் இந்திய அணி தோல்வியடைந்தபோதும், துடுப்பாட்டத்தில் இரு இன்னிங்சிலும் (149, 51) சேர்த்து 200 ஓட்டங்கள் எடுத்தார் ஹோலி.

இதன்மூலம் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக் கான துடுப்பாட்ட தரவரிசையில் 'நம்பர் 1' இடம் பிடித்தார் ஹோலி. இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் தோனி (வயது-37), கூறியதாவது,

கடந்த சில ஆண்டுகளாக கிரிக்கெட் அரங்கில் ஹோலி (வயது-29), சிறந்த வீரராக திகழ்கிறார். உலகின் எந்த இடத்துக்குச் சென்றாலும் ஓட்டமழை பொழிகிறார். இது மகிழ்ச்சியாக உள்ளது. உலகின் சிறந்த வீரர் என்ற 'ஜாம்பவான்' அந்தஸ்தை ஹோலி கிட்டத்தட்ட நெருங்கி விட்டார்.

**வெற்றிக்கு வழி**

அதேநேரம் டெஸ்ட், போட்டிகளைப் பொறுத்தவரையில் நாம எப்படி துடுப்பாட்டம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. ஐந்து நாட்கள் களத்தில் நிலைத்து விளையாடுவதும் பெரிய விடயமல்ல. போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்றால், எதிரணியின் 20 விக்கெட்டுக்களையும் வீழ்த்த வேண்டும்.

**வாங்கியது ஏன்?**

அடுத்த ஆண்டில் இங்கிலாந்தில் ஒருநாள் உலக கிண்ண தொடரில் பங்கேற்க உள்ளோம். இதனால் இங்கு பந்தை 'சுவிங்' செய்வது முக்கியம். இதற்கு என்ன தேவை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தவிர, 50 ஓவர்கள் பந்துவீசிய பின் அந்த பந்தை ஐ.சி.சி., பயன்படுத்துவது இல்லை. இதனால்தான் மூன்றாவது ஒருநாள் போட்டி முடிந்த பின், நடுவரிடம் இருந்து பந்தை வாங்கிச் சென்றேன்.

இதை பந்துவீச்சு பயிற்சியாளர் பரத் அருணிடம் காண்பித்து 'ரிவர்ஸ் சுவிங்' குறித்து தெரிந்து கொள்ள விரும்பினோம். 40 ஓவர்களுக்குப் பின் எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் 'யோர்க்கர்' வீசவும், ஸ்டம்புகளுக்கு அருகில் பந்துவீச தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். என்று தோனி கூறினார்.




எகிப்து கோல்காப்பாளர் எல் ஹாட்ரி ஓய்வு பெற்றார்.

எகிப்து கால்பந்து அணி கோல்காப்பாளர் எல் ஹாட்ரி (45), கடந்த 1996 முதல் தேசிய அணியில் விளையாடி வந்தார்.

சமீபத்தில், ரஷ்யாவில் நடந்த உலக கிண்ணத் தொடரில் பங்கேற்றார்.

இதன்மூலம் உலககிண்ண தொடரில் பங்கேற்ற மூத்த வீரர் என்ற பெருமை பெற்றார். நான்கு முறை ஆபிரிக்க கிண்ணம் வென்ற அணியில் விளையாடி உள்ளார்.

இதுவரை, எகிப்து அணிக்காக 159 போட்டிகளில் பங்கேற்று உள்ளார். இந்நிலையில், தேசிய அணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இது குறித்து எல் ஹட்ரி முகநூலில் வெளியிட்ட செய்தியில்,


'22 ஆண்டு, 4 மாதம், 12 நாட்களாக எகிப்து அணிக்காக விளையாடினேன். தற்போது, தேசிய அணியிலிருந்து விடைபெறும் நேரம் வந்து விட்டதாக உணர்கிறேன்.

இது வரை பங்கேற்றதை எண்ணி பெருமை அடைகிறேன்,' என தெரிவித்துள்ளார்.

எகிப்தை சேர்ந்த இஸ்மாயிலி கழக அணிக்காக தொடர்ந்து விளையாடுவார்.

## நீதிமன்றை அவமதித்த குற்றவாளி

# ஞானசாரருக்கு 19 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை!



## மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 6 ஆண்டுகளில் அனுபவிக்கும் படி 19 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது. கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்ட ஞானசார தேரருக்கு எதிராக சுமத்தப்பட் டுள்ள 4 குற்றச்சாட்டுக் களிலும் அவர் குற்ற வாளி என மேன்முறை யீட்டு நீதிமன்றம் அறிவித்து ள்ளது.

இதற்கமைய, அவருக்கு 19 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து, அந்த தண்டனையை ஆறு ஆண்டுகளில் அனுபவிக் குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டு ள்ளது.

அதேநேரம், தற்போது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரரை, உடனடியாக சிறைச்சாலை பொறுப்பில் எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

## பேருந்து தரிப்பிடம் அமைப்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கின் மாமுனைச் சந்தியில் பொது மக்களின் நன்மை கருதி பேருந்து தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த சி.நாக லிங்கம் மற்றும் நா.குணசீ லன் ஆகியோரின் நினை வாக அவர்களின் உறவினர் களால் அமைக்கப்பட்டு அண் மையில் இந்த பேருந்து தரிப்பிடம் திறந்து வைக்கப் பட்டது. இதனால் பயணிகள் பெரும் நன்மையடைந்து ள்ளனர். (இ-60)

### யாழில் இளைஞனைக் கடத்தி சித்திரவதை செய்து கொன்ற

# இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் சிப்பாய்க்கு இருபது ஆண்டுகளின் பின்னர் மரண தண்டனை

## நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு

(திருமலை)

யாழ்ப்பாணத்தில் இளை ஞர் ஒருவரை சட்டவிரோ தமாக கைதுசெய்து அவரை சித்திரவதை செய்து கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவ கட் டளை தளபதி மற்றும் இரா ணுவச் சிப்பாய் ஆகிய இரு வருக்கும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசர் இளஞ்செழி யன் மரண தண்டனை விதி த்து தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த இருபது ஆண்டுக ளுக்கு முன்னர் (09.09. 1998) யாழ்.குருநகர் பகு தியை சேர்ந்த அன்ரன் குண சேகரம் என்ற இளைஞர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் இர ண்டு நாட்களில் சடலமாக யாழ்.போதனா வைத்தியசா லையில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பில் 51 ஆவது முகாம் தளபதி முதலாம் எதிரியாகவும், யாழ்.512 ஆம் படைப்பிரிவின் கட் டளை தளபதி இரண்டாம் எதிரியாகவும், திருநெல் வேலி இராணுவ முகாம் இராணுவ அதிகாரி மூன் றாம் எதிரியாகவும் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கில் பல சாட் சியங்களது சாட்சியங்களை யும், எதிர்த்தரப்பு சட்டத்தர ணியின் வாதங்களையும் பரிசீலித்த மன்றானது நேற்று இவ் வழக்கின் தீர்ப்புக்காக திகதியிட்டிருந்தது.

இதன்படி நேற்றுக் காலை நீதிபதி தனது தீர்ப்பினை திறந்த மன்றில் அறிவித்தி ருந்தார். அத்துடன் நீதிபதி தனது தீர்ப்பில் இலங்கை உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பா கவும், சித்திரவதை தொடர் பான வழக்குகளிலும் வழங் கிய தீர்ப்புக்களையும், ஐ.நா. யுத்த குற்ற நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களையும் மேற்கோள்காட்டி தனது தண் டனை தீர்ப்பை வழங்கியி ருந்தார்.

இவ் வழக்கின் முதலாம் எதிரியான 51 ஆவது படைத் தளபதி அச்சுவேலி முகாமை சேர்ந்தவர் அவர் குறித்த இளை ஞனை கைது செய்தமை, தடுத்து வைத்தமை என் பன வற்றுடன் மாத்திரமே தொட ர்புபட்டுள்ளதுடன் அவர் சித் திரவதை புரிந்தமை, கொலை செய்தமை என்பனவற்று டன் தொடர்புபட்டார் என்பத ற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாமையினால் அவர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் முன்வைக்கப் பட்ட சாட்சியங்கள் ஆதாரங் களூடாக பார்க்கின்ற போது இரண்டாம் எதிரியான இரா ணுவ கட்டளை தளபதி, மற்றும் திருநெல்வேலி இரா ணுவ முகாம் அதிகாரி ஆகி யோருக்கு எதிரான குற்றச் சாட்டானது நியாய்மான சந் தேகங்களுக்கு அப்பால் நிரூ பிக்கப்படுகின்றது.

எனவே குறித்த வழக் கில் குற்றவாளிகளாக நிரு பிக்கப்பட்ட 512 ஆம் படை பிரிவின் கட்டளை தளபதி மற்றும் திருநெல்வேலி இரா ணுவ அதிகாரி ஆகிய இரு வருக்கும் ஜனாதிபதி விரும் பும் நேரத்தில் விரும்பும் இடத் தில் கழுத்தில் சுருக் கிட்டு உடலில் இருந்து உயிர் பிரியும் வரை தூக்கிலிட்டு தண்டனை நிறைவேற்ற வேண்டும் என திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழி யன் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

குறித்த மரண தண்டனை தீர்ப்பானது வாசிக்கப்படும் போது நீதிமன்றின் அனை த்து விளக்குகளும், அணை க்கப்பட்டு தீர்ப்பு எழுதப்பட்ட பேனா முறித்து எறியப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் சில நிமிடம் ஒத்திவைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்த க்கது. (இ-9)

## இராசி பலன்

**மீனம்:** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மேடம்:** தொழில் வளர்ச்சிக்காக புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், வம்பு வழக் குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சி யொன்றில் ஆர்வம் காட்டு வீர்கள், கலகலப்பான தகவல் கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள் வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.

**கும்பம்:** வியாபார விருத்தியுண்டு, பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளை களின் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமு ண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி பலன் கிரகநிலை | | சூரி, புத, ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் மூலம் இரவு 11.40 மணிக்கு கடக-சந் | | |
| சனி | | குரு | சுக் |

**09.08.2018**
ஆடி 24, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.20 மணிவரை
திருவாதிரை காலை 7.05 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 5.28 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
உலக ஆதிவாசிகள் தினம்
பிரதோச விரதம்

வளவன்

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித் தாலும் அடுத்தடுத்த செல வுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத் துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த் தியமாக சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** சிறப்பான நாள், தொலை பேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வத்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்ப வங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வராத உறவினர்கள் திடீ ரென வீடு தேடி வரலாம், முயற்சிகள் எளிதில் கைகூ டும்.

**விருச்சிகம்:** பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண் டிய நாள், எடுத்த காரிய த்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உரு வாகும்.

**துலாம்:** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, விருந்து களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தன்னம் பிக்கை அதிகரிக்கும் நாள்.

# வாள்வெட்டு வன்முறை குற்றச்சாட்டில் கைதான மூவர் சிறையிலிருந்து பரீட்சை எழுதுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூவர், சிறையிலிருந்து க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதுகின்றனர்.

. அண்மைக்காலமாக வன்முறைக் கும்பலின் அடாவடிகள் அதிகரித்து வருவதாகவும் குறித்த குற்றச்செயல்களுக்கு பொலிஸாரும் உடந்தை என குற்றஞ் சாட்டப்பட்டது. இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, சாவகச்சேரி, சரசாலை, மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த 10 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 4 வாள்கள் உட்பட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் 18 வயது முதல் 20 வயதுக்குட்பட்டவர்கள்.

இவர்களில் மூவர் இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்.

இந்நிலையில் சந்தேக நபர்கள் 10 பேரும் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் உயர்தரப் பரீட்சை எழுதுவதற்கு நீதிமன்று அனுமதியளித்துள்ளது. இவர்கள் மூவரும் நேற்றிலிருந்து பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

# வீதிப் புனரமைப்பு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

50 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாது மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வந்த துணவி - சங்கானை சேச் வீதிக்கு செல்லும் வீதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முயற்சியால் புனரமைப்பு செய்யப்படுகின்றது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட குறித்த துணைவி - சங்கானை சேச் வீதியை புனரமைத்து தருமாறு குறித்த பகுதி மக்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் மக்களின் தேவைப்பாடுகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான சி. பாலகிருஷ்ணனின் முயற்சியால் முன்னுரிமைப் படுத்தப்பட்டு குறித்த வீதி வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கணேஸ்வரனை விசாரித்ததாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

சமூக சேவையாளரும் சிவன் அறக்கட்டளையின் தலைவருமான கணேஸ்வரன் வேலாயுதத்தின் வீட்டிற்கு சென்று இனம் தெரியாத நபர்கள் அவர் தொடர்பாக விசாரித்ததாக பொலிஸாரின் அவசர தொலை பேசி இலக்கத்திற்கு முறையிடப்பட்டதையடுத்து இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு நெல்லியடியிலுள்ள கணேஸ்வரன் வேலாயுதத்தின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவர் தொடர்பாக விசாரித்ததாக முறையிடப்பட்டதை அங்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் இது தொடர்பில் விசாரணையை முன்னெடுத்தனர்.

கணேஸ்வரன் வேலாயுதம் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# மண்குழி நன்னீர் கிணற்றிலிருந்து கடற்படையினர் நீர் எடுக்கத்தடை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு உட்பட்ட மண்குழி எனும் பகுதியிலுள்ள நன்னீர் கிணற்றிலிருந்து கடற்படையினர் நன்னீர் பெறுவதற்கு தடை விதித்து பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபை அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஞா.லக்ஸ்மன், கடற்படையினர் பொதுமக்களின் பாவனையில் உள்ள நன்னீர் கிணற்றில் நீர் எடுப்பதனைத் தடை செய்ய வேண்டும்எனக் கோரி பிரேரணையை முன் மொழிந்தார்.

குறித்த பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பிரேரணையின் பிரதிகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் , ஊர்காவற்றுறை கடற்படைத் தளபதி , யாழ்.மாவட்ட செயலாளர் , வடமாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மண்குழி பிரதேசத்தில் காணப்படும் நன்னீர் கிணற்றிலிருந்து கடற்படையினர் தமது தேவைக்காக தினமும் 10 ஆயிரம் லீற்றர் நன்னீரை நீர்த் தாங்கியில் எடுத்து செல்கின்றனர். அதனால் நிலத்தடி நீர் வற்றி , நீர் உவர் நீராக மாற்றம் அடைந்து வருகின்றது. இதனால் மக்கள் பாவனைக்கு நீர் இல்லாமல் போகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் அப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைகளுக்கு நன்னீரை பெற்றுக் கொள்ள பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மக்கள் பயன்பாட்டிலுள்ள நன்னீர்க் கிணற்றிலிருந்து கடற்படை நீர் எடுக்கத் தடை விதிக்க வேண்டும் என குறித்த பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-9)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 100 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.வசந்தசேனனும்செயலாளராக நா.வன்னியசிங்கமும் பொருளாளராக வி.தயாபரனும் உப தலைவர்களாக இரா.செல்வ வடிவேல், என்.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

# O/L மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 9 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரின் ஏற்பாட்டிலும் சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் அனுசரணையில் நடைபெறும் இந்த இலவச கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களுக்கான நூல்கள், அனைத்துப் பாடங்களும் அடங்கிய tutes, கடந்தகால வினா விடை தொகுப்பு என்பன இல வசமாக வழங்கப்படவுள்ளன.

குறித்த கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரியிலும் எதிர்வரும் 11 ஆம் திகதி பெண்களுக்கும் 12 ஆம் திகதி ஆண்களுக்கும் 13 ஆம் திகதி இருபாலருக்குமாக காலை 6.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் 14 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு மண்டபத்திலும் 15 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலையிலும் 16 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை மன்னார் நகரசபை மண்டபத்திலும் 17 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வவுனியா நகர சபை மண்டபத்திலும்நடைபெறவுள்ளது. (இ-9)

30 வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று கிடக்கும்

# வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

யாழ்.புத்தூர் சந்தியிலிருந்து சுன்னாகம் வரை செல்லும் பிரதான வீதி கடந்த 30 வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது மட்டுமல்லாது தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளிகள் பெரும் அவஸ்தைக்கும் ஆளாகி வருகின்றனர்.

எனவே கர்ப்பிணிகள் மற்றும் நோயாளிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பயணிக்கும் இந்த வீதியை மாகாண சபை உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்து புனரமைப்பு செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்கள் எரிந்துநாசம்

(கரணவாய்)

கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீடு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவர் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வீடு ஒன்றை அமைத்து வருகின்றார்.

அமைக்கப்பட்டு வரும் அவ் வீட்டிற்கு தேவையான பொருட்கள் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்ட நிலையில் அவை கடந்த திங்கட்கிழமை தீயில் எரிந்து நாசமாகின.

இது திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்ற ரீதியில் வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார். (இ-60)



இணுவில் மஞ்சத்தடி முருகன் மீது வீரமணிஐயர் இயற்றிய பாடல்களை ஸ்ரீகுகன் கணேசசுந்தரம் இசையமைப்பில் சாந்தன் பாடிய இசை இறுவட்டு அண்மையில் ஆலய நிர்வாக சபைச் செயலர் தலைமையில் முன்னாள் துணைவேந்தர். பேராசிரியர் என் சண்முகலிங்கனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சின்மயா மிஷன் சுவாமிகள்,மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், முன்னாள் வணிக பீடாதிபதி க.தேவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# பொலித்தீன் பைகளால் பாதிப்பு

(கரணவாய்)

கரணவாய் மண்டான் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளில் பொலித்தீன் பைகள் விவசாய நிலப்பகுதிக்குப் பறந்து வருவதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையினால் கரணவாய் மண்டான் பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தைச் சுற்றி உயரமான கம்பி வலைகள் அமைக்கப்பட்டுள்ளன.



இருப்பினும் அந்தக் கம்பி வலைகளுக்கு மேலாக பறந்து வரும் பொலித்தீன்கள் விவசாய நிலங்களுக்குள் சென்று நிலத்தினை மாசுபடுத்துவதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ-60)

# பாரிய இழப்பு ஏற்பட்ட துயரத்தை என் மனதில் உணர்ந்தேன்

## கலைஞர் கருணாநிதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இரங்கல்





(கொழும்பு)

முதுபெரும் தமிழறிஞர், உலகத் தமிழர்களின் உன்னத தலைவர், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்கள் காலமானார் என்ற செய்தியை அறிந்து பாரிய இழப்பு ஒன்று ஏற்பட்ட துயரத்தை என் மனதில் உணர்ந்தேன். கடுஞ்சுகயீனம் காரணமாக காவேரி வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வந்த கடந்த சில நாட்களாக அவர் பற்றிய கரிசனையோடு நான் இருந்த அதேவேளை அவர் சுகம் அடைந்து உலகத் தமிழர்களுக்குத் தலைவனாக தொடர வேண்டுமென்ற பிரார்த்தனையே என் மனதில் இருந்தது. ஆயினும் காலம் அவர் உயிரைக் கவர்ந்து சென்று விட்டது. அவர் இயற்கையெய்திவிட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


கடந்த ஆறு தசாப்தங்களாகத் தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து அரசியல் பணியாற்றிய அவர் ஐந்து தடவைகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் தொடர்ச்சியாக 13 தடவைகள் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றியீட்டியவராகவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் கழகத்தின் அரசியல் பணியை ஆற்றியதோடு மட்டுமல்ல செம்மொழியாகிய தமிழின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் சிறப்பான பணிகளைச் செய்தவராகவும் சிறந்த தமிழறிஞர், இலக்கிய அறிஞர், கதாசிரியர், நாடகாசிரியர், எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், உயர்வான தலைமைப் பண்புகள் கொண்டவர், அரசியல் ஞானி போன்ற பன்முக ஆளுமை கொண்டவராக அவர் திகழ்ந்தார். இந்திய உப கண்டத்தின் அரசியலிலும் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவராகவும் அவர் மதிக்கப்பட்டார். இத்தகைய உன்னத தலைவரின் சாதனைகளை இச் சிறிய அனுதாபச் செய்தியுள் அடக்கிவிட முடியாது.

கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் எனக்கும் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்புகளும் உறவுகளும் இருந்து வந்தன. நான் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்திலும் அதன் பின்பும் அவர் எனக்குப் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புடன் ஆலோசனைகளும் வழங்கியதோடு அவர் இறக்கும் வரை எமது அன்பான தொடர்புகளும் உரையாடல்களும் தொடர்ந்தன. தமிழ் தலைவர் தந்தை செல்வநாயகம், தலைவர் அமிர்தலிங்கம் உட்பட பல இலங்கைத் தமிழ் தலைவர்கள் தமிழ் நாட்டில் சீவித்த காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் அவரின் அன்பும் எமக்கான ஒத்துழைப்பும் அதிகமாக இருந்ததோடு அரசியல் ரீதியிலும் எமக்குப் பல்வேறு வகையில் உதவியாக இருந்தார். அவரின் பிரிவு என் மனதில் ஆழ்ந்த கவலையைத் தருவதாக உணர்கின்றேன்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளிலும் அவர் மிகுந்த ஈடுபாடு காட்டினார். கலவர காலங்களில் தமிழ் மக்கள் அடைந்த துயரங்கள், வேதனைகளில் தனது கரிசனையை காண்பித்து இந்திய அரசின் கவனத்தையீர்க்கும் வகையில் செயற்பட்டார். அவரின் பிரிவால் இலங்கைத் தமிழ் மக்களும் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளனர் என்பதை தெரிவிப்பதோடு அம் மக்கள் சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும் எனது சார்பிலும் எனது ஆழ்ந்த கவலைகளையும் அனுதாபங்களையும் மறைந்த தலைவரின் குடும்பம் உறவினர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் தெரிவிப்பதோடு உலகத் தமிழர்களின் உதய சூரியனாக இருந்து ஒளியூட்டிய அவரின் மறைவு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## புலம்பெயர் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் இராணுவம் அக்கறை

(கொழும்பு)



மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்துள்ள இலங்கை சமூகத்தை இலங்கையில் பெருமளவில் முதலீடுகளைச் செய்யக்கூடிய ஒரு பிரிவினராக நோக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க வலியுறுத்தினார்.

இவ் வருடத்திற்கான கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கிற்கான ஒழுங்குகள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டுப் போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் வடக்கு - கிழக்கில் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த இராணுவம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு போன்ற நிகழ்வுகள் மூலமாக வெளிநாடுகளின் பாதுகாப்புத் துறை பிரதிநிதிகள் இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகள் குறித்த தகவல்களை புலம்பெயர் சமூகத்துக்கும் தெரியப்படுத்த முடியும்.

அவ்வாறு தெரியப்படுத்தும் போது இலங்கை குறித்து தவறான புரிதலுடன் இன்னமும் இருக்கும் புலம்பெயர் சமூகத்தின் பிரிவினரின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும். அவ்வாறான நம்பிக்கை ஏற்படும் போது அந்தச் சமூகத்தில் தலைவர்களாக இருக்கும் கணிசமான பிரிவினர் இலங்கையில் முதலீடுகளைச் செய்வதில் நாட்டம் காட்டுவர்.

அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே பாதுகாப்பு கருத்தரங்கில் புலம்பெயர் சமூகத்துடன் தொடர்புடைய விவகாரத்தை ஆராய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSMS/ ஆயுள்வேத வைத்தியர்<br>தொ.இ: B/8791 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: G/080 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 50<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/சொந்தம்<br>தொ.இ: B/8793 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 27 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/086 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BMIT/தனியார் தொழில்<br>தொ.இ: B/8795 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 33 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:கனடா<br>தொ.இ: G/089 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMA/லண்டன்PR<br>தொ.இ: B/8797 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 35<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/098 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சேகரிக்கப்படும் கழிவுகளை தரம்பிரித்து வருமானமாக்குவதற்கு நடவடிக்கை

## துணுக்காய் பிரதேசசபை செயலாளர் தனபாலசிங்கம் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச சபையினால் சேகரிப்படும் கழிவுகளைத் தரம்பிரித்து வருமானமாக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேசசபையின் செயலாளர் கே.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகளை பாதுகாப்பாக அழிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர் கே.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதாவது பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டு கழிவுகள் கொட்டப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட உயிலங்குளம் பகுதியில் கொண்டு சென்று கொட்டப்பட்டு அவை பாதுகாப்பான முறையில் அழிக்கப்படுகின்றன.

இவ்வாறான கழிவுகளை தரம்பிரித்து வருமானமாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான வேலைகள் ஆரம்பிக்கும் பொருட்டு கழிவுகள் கொட்டப்படும் பகுதி ஒரு மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# வெவ்வேறு குற்றச்சம்பவங்களில் தடயப்பொருட்களுடன் இருவர் கைதாகினர்





(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் இரண்டு வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது தடயப் பொருட்களுடன் 2 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ரீ. சுபேசன் தலைமையில் விரைந்த பொலிஸார் தருமபுரம் 5 ஆம் யூனிட் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி வெட்டப்பட்ட சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான 10 அடி நீளம் கொண்ட 10 வேப்பமரக் குற்றிகளை வீடு ஒன்றில் இருந்து கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில், தருமபுரம் 10 ஆம் யூனிட் பகுதியில் மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் வளர்க்கப்பட்ட மூன்று. பசு மாடுகளை மகேந்திர பிக்கப் வாகனத்தில் கடத்திச் சென்று வட்டக்கச்சி பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மகேந்திர பிக்கப் வாகனத்தையும், கடத்தப்பட்ட பசு மாடுகள் என்பவற்றை கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த இரண்டு குற்றச் செயல்கள் தொடர்பில் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.(2-15)

# ஆன்மீகச் சுற்றுலா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதி முதியோர்கள் இன்று வியாழக்கிழமை ஆன்மீகச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

திருக்கோணேஸ்வரம், ஸ்ரீலக்சுமி நாராயணர் கோவில், ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில், கன்னியா வெந்நீரூற்று ஆகிய திருத்தலங்களுக்கே இவர்கள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலக உத்தியோகத்தர்களும் பளைப் பிரதேச செயலக பிரிவு, சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்களும் முதியோர்களுக்கு அனுசரணையாகச் செல்ல உள்ளனர். (2)




# மீன் வியாபாரி தவறவிட்ட பணம் போக்குவரத்து பொலிஸாரினால் ஒப்படைப்பு



(பனிக்கன்குளம்)

புத்தளத்திலிருந்து முல்லைத்தீவிற்கு மீன் வியாபாரம் மேற்கொள்ளும் புத்தளம் வாசி ஒருவரின் ஒரு தொகைப் பணம் நேற்று முன்தினம் இரவு வவுனியாவில் தவறியுள்ளது. தொலைத்த பணமான 35 ஆயிரத்து 640 ரூபாவை கடமை முடிந்து சென்ற போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் அன்று இரவு கண்டெடுத்து அதை போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார். நேற்றுக்காலை பணம் தவறவிட்ட குறித்த மீன் வியாபாரியை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து தவற விடப்பட்ட பணத்தையும் ஆவணங்களையும் பொலிஸார் வழங்கியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவதாவது.

புத்தளம் செல்வபுரம் பகுதியிலிருந்து முல்லைத்தீவிற்குச் சென்று அங்கிருந்து மீன் வியாபார நடவடிக்கை மேற்கொண்டு வரும் நபர் ஒருவர் நேற்று இரவு முன்தினம் வவு னியா மூன்றுமுறிப்பு பகுதியில் வைத்து தனது மணிப் பேர்சை வாகனத்தின் முன்டாஸ் போட்டில் வைத்து விட்டு வாகனத்தைச் செலுத்திக் கொண்டு முல்லைத்தீவு நோக்கிச் சென்றுள்ளார். இதன்போது வவுனியா பிரதான மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் பணப்பை தவறியுள்ளது. போக்குவரத்துப் பொலிஸார் தமது சோதனை நடவடிக்கையின் போது வழிமறித்த போது பணப்பை தவறியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டு விட்டுச் சென்றுள்ளார். இதன் பின்னர் நேற்றுக்காலை பணத்தை தவறவிட்ட மீன் வியாபாரிக்கு தகவல் வழங்கப்பட்டு பணப்பை வழங்கப்பட்டது.

குறித்த பணம் நகை அடைவு வைத்து அப்பணத்தில் மீன் வியாபாரம் மேற்கொள்வதற்காக எடுத்துவரப்பட்டுள்ளதாக மீன் வியாபாரி தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

## மன்னார் பிரதேசசபை அமர்வு

# உபதவிசாளர் , பதினொரு உறுப்பினர்கள் வெளிநடப்பு

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் 5 ஆவது அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாகிர் தலைமையில் இடம் பெற்ற போது உப தவிசாளர் உட்பட 11 உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்துள்ளனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் கட்சியை சார்ந்த குறித்த சபையின் தவிசாளர் தன்னிச்சையாக செயற்படுவதாகவும், கட்சியை வளர்க்கும் நோக்கோடு செய்யப்படுவதாகவும் சில நடவடிக்கைகள் சபையின் அனுமதி பெறாத நிலையில் முன்னெடுப்பதாகவும் வெளி நடப்பு செய்த உறுப்பினர் கள் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர்.

மன்னார் பிரதேச சபையில் தவிசாளர் உட்பட 21 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 7 பேரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 2 பேரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 2 பேர் உள்ளடங்கலாக மூன்று கட்சிகளைச் சேர்ந்த உப தவிசாளர் உட்பட 11 உறுப்பினர்களே இவ்வாறு வெளி நடப்பு செய்துள்ளனர். (2)

# ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் தீர்மானங்கள்; இந்திய இழுவைப்படகுகள் அகற்றப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சி இலவங்குடா பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப்படகுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு இரண்டு தடவைகள் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும் இதுவரை அகற்றப்படாமையினால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடற்பகுதியில் கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொண்ட 60 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தொழில்களை செய்ய முடியாது போயுள்ளதாகவும் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப்படகுகளில் இருந்து வெளியேறுகின்ற எண்ணெய்க்கசிவுகளால் கரையோரக்கடல் பகுதிகள் மாசடைவதுடன் கடல் வாழ் உயிரினங்கள், கடல் தாவரங்கள் அழிவடைவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு தமது வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுக்கும் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப் படகுகளை அகற்றி தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளன்ர்

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் தொடர்ந்தும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் இவற்றை அகற்றித் தருவதாகத் தெரிவித்த போதும் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப்படகுகள் இதுவரை அகற்றப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள கடற்றொழிலாளர்கள் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப் படகுகளை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# முறிகண்டி குளத்தைப் புனரமைத்து வயல் நிலங்களை விடுவியுங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முறிகண்டி குளத்தைப் புனரமைத்து அதற்குட்பட்ட வயல் நிலங்களை விடுவித்து தருமாறு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட திருமுறிகண்டி குளம் கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக உடைப்பெடுத்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை இக்குளத்திற்குட்பட்ட 93 ஏக்கர் நெற்செய்கை காணிகளில் ஒரு தொகுதி காணிகள் தவிர ஏனைய வயல் காணிகள் இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்து இதுவரை விடுக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் மேற்படி குளத்தின் கீழ் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வந்த 25 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கடந்த 'ஒன்பது ஆண்டுகளாக விவசாய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் வாழந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.


உடைப்பெடுத்த நிலையில் காணப்படும் குளத்தை புனரமைத்துத் தருமாறு இதற்குட்பட்ட விவசாய நிலங்களை மிக விரைவாக விடுவிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திருமுறிகண்டி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப்பணிகள் நிறைவு

## வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் பிரேம்குமார் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு பணிகள் முழுமை பெற்றுள்ளதாக வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் வீ.பிறேம்குமார் தெரிவித்துள்ளார்.**



வடக்கு மாகாணத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாக காணப்படும் கிளிநொச்சி இரணைமடுக்குளம் கடந்த 1975 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எவ்வித பாரிய புனரமைப்பு வேலைகளும் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக மேற்கொள்ளப்பட முடியவில்லை.

கடந்த 2016ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையும் இடைநிறுத்தப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினது இலகுகடன் திட்டத்தின் கீழ் குளத்தின் அணைக்கட்டுப் பகுதியை இரண்டு அடியால் உயர்த்தி 19 MCM நீர்கொள்ளளவை கூட்டுவதற்கான திட்ட வரைபும் அதனுடன் இணைந்த ஏனைய கட்டுமானங்களும் வான், பாலம் அமைப்பு வேலைகளும் திருவையாறு ஏற்று நீர்ப்பாசன வேலைகளும் முன்மொழியப்பட்டு அதற்கான வேலைத் திட்டங்களும் சுமார் 2000 மில்லியன் பெறுமதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குளத்தின் புனரமைப்பு பணிகளுக்கு சமாந்தரமாக குளத்தின் கீழ் அமைந்திருக்கும் 21, 000 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்கின்ற பிரதான வாய்க்கால், D வாய்க்கால், வயல் வாய்க்கால், கழிவு வாய்க்கால் மற்றும் விவசாய வீதிகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் IFAD நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2890 மில்லியன் இலகு கடனிலும், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 310 மில்லியன் நிதி உதவியுடனும் 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017 பெப்ரவரி மாதமளவில் ஒதுக்கப்பட்ட நிதியில் வேலைத் திட்டங்களை நிறைவு செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டன.

இதில் 2013ஆம் ஆண்டில் 10 வேலைத்திட்டங்களும் 2014 ஆம் ஆண்டு 16 வேலைத்திட்டங்களும் 2015 ஆம் ஆண்டு 40 வேலைத் திட்டங்களும் 2016 ஆம் ஆண்டு 65 வேலைத்திட்டங்களும் 2800 மில்லியன் செலவில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு பணிகள் தொடர்பில் வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது மேற்படி குளத்தின் புனரமைப்புப் பணிகள் முழுமை பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் வடக்கு முதலமைச்சர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களின் போராட்ட இடத்திற்கு நேரடியாகச் சென்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட தொழிலை நிறுத்தக்கோரி மீனவர்கள் இன்று எட்டாவது நாளாகவும், போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண மீன்பிடி மற்றும் விவசாய அமைச்சர் க.சிவனேசன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் மீனவர்களுடன் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போது மீனவர்கள் தங்கள் உண்மையான தொழில் பிரச்சினையை முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைத்துள்ளார்கள்.

இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

சட்டவிரோத தொழில்கள் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று அறிந்து கொள்வதற்காக முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களை சந்தித்து பேசியுள்ளேன்.

ஒரு மணிநேரம் வரை அவர்களின் பிரச்சினைகளை கேட்டுக்கொண்டேன். அதில் இருந்து நான் அறிந்து கொண்ட சில விடயங்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களால் இவர்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆகவே வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களை என்னவிதத்தில் தடை செய்யலாம் என்பதை நாங்கள் அரசாங்கத்துடன் பேசிக் கொள்ள வேண்டும். சிலர் பாரம்பரியமாக காலாகாலம் இங்கு வருவதாகக் கூறியுள்ளனர்.

அதிலும் பார்க்க அதிகளவானவர்கள் ஏதோ ஒரு விதத்தில் உள்நுழைகின்றார்கள் என்பது மீனவர்களின் குறையாக காணப்படுகின்றது. அதனை நாங்கள் தீர்த்துக்கொள்ளவேண்டும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டத்திற்கு புறம்பான மீன்பிடித் தொழில்களில் ஈடுபடுகின்றார்கள் என்றும் அதனால் மீன் வளங்கள் மிக விரைவாக குறைந்துகொண்டு செல்கின்றது, சூறையாடி செல்லப்படுகின்றது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

ஒருசிலர் குறிப்பிட்ட வலைகளைப் பாவிக்கும் போது குறைந்த கண் இருக்கின்ற வலைகளை பாவிக்கும்போது சிறிய மீன்கள் எவ்வளவோ அதில் பிடிபடுகின்றன. அவற்றை அவர்கள் வீணாக்குகின்றார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். இந்த மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் மீன்பிடி அமைச்சருடன் பேசவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது.

அத்துடன்வடக்கு மாகாண மீன்பிடி திணைக்களத்தின் உத்தியோகபூர்வமான அலுவலகம் இங்கு இல்லாதது பெரும் சிரமத்தை தந்துள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு பல மீனவர்களின் பிரச்சினைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மத்திய அரசாங்கத்துடன் நாங்கள் பேசி ஒரு முடிவிற்கு வர இருக்கின்றோம்.

எதிர்வரும் 12 ஆம் திகதி மத்திய அமைச்சர் இங்கு வருவதாக இருக்கின்றது. அதற்கு முன்னர் மக்கள் சார்பில் எங்களின் கருத்துக்களை அவர்களுக்கு தெரியப்படுத்தவுள்ளேன். ஏனைய விடயங்கள் அவர்களுடன் பேசியதன் பின்னர்தான் தீர்க்கமான முடிவிற்கு வர முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)



யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் -பூநகரி வீதி வழியாக பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் நின்ற பனை மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம்.

# தினமும் ஏழு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 32 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சி நிலவுகின்ற ஏழு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தினமும் 32 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக 21 ஆயிரத்து 959 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தில் 48 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 18 ஆயிரத்து 953 பேருக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை பிரதேச சபைகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, பிரதேச செயலகங்கள் என்பன வழங்கி வருகின்றன.

வரட்சி நிலவுகின்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொண்டு வினவிய போது, கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்னகர், விவேகானந்த நகர், பாரதிபுரம், உதயநகர் கிழக்கு, மலையாளபுரம், கணேசபுரம் ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தினமும் 32 ஆயிரம் லீற்றர் தண்ணீர் நான்கு பவுசர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை ஆகிய பகுதிகளுக்கான குழாய் மூலமான குடிநீர் விநியோகத்திட்டத்தின் கீழ் இணைப்புக்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தினமும் 250 லீற்றர் கியூப் முதல் 300 லீற்றர் கியூப் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி மாவட்ட அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# நீதிமன்ற சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதிகளில் இருவர் கைது

(கண்டாவளை)

முல்லைத்தீவு நீதிமன்ற சிறைக்கூடத்தில் இருந்து தப்பியோடிய நான்கு கைதிகளில் கொலைக்குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஒருவரையும் களவுச்சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவரும் செல்வபுரம் காட்டுப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் கடந்த 23.05.2018 அன்று இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சுன்னாகத்தைச் சேர்ந்த கொலைக்குற்றவாளி கடந்த 31.05.2018 அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மற்றும் கடந்த 27.06.18 அன்று முல்லைத்தீவு நகர், கள்ளப்பாடு உள்ளிட்ட பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் மூன்று குற்றவாளிகளும் கடந்த 6 ஆம் திகதி விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கொண்டுவரப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் விசாரணைக்காக நீதிமன்ற சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட வேளை நீதிமன்ற சிறைச்சாலையிலிருந்து தப்பியோடியுள்ளார்கள்.

இவர்களை தேடும் பணியில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்ட நிலையில், கொலைக்குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஒருவரையும் களவுச்சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவரையும் செல்வபுரம் காட்டுப்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம்இரவுகைது செய்யப்பட்டனர். (2-315)

# தேன் என சீனிப்பாணி விற்பனை; ஒருமாத காலம் சிறைத்தண்டனை


(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வியாபார நிலையம் ஒன்றிற்கு தேன் என்று தெரிவித்து, சீனிப்பாணியை விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தினால் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபாவும் ஒருமாத காலம் சிறைத்தண்டனையும் தண்டப்பணம் செலுத்த தவறினால் மூன்று மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (2-281)

# கலைத்தரிசனம்






## கராத்தே மாஸ்டர் சூசைநாதர் யசோதரன் (பாபு) அவர்களுடனான சந்திப்பு

**1977 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நான்காம் திகதி வண்ணாங்குளம், முல்லைத்தீவில் பிறந்தார். தற்போது 4 ஆம் கட்டை ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்து வருகின்றார். கராத்தேக் கலையில் மூன்றாவது கறுப்புப்பட்டி பெற்ற இவர் சிறந்த நொக்கவுட் பைற்றர். இவற்றோடு சிலம்பம், நெச்சாக், வெப்பன், வாள் வீச்சு, டொன்போ, சாய், லொக்ஸ், சாண்டோ ஆகிய துறைகளில் அதி சிறந்து விளங்குபவர். தனது சித்தப்பாவிடம் சாண்டோ பழகி முதல் மேடையில் மார்பின் மீது லொறி ஏற்றினார். பின்பு இரண்டாவது மேடையில் மூன்று மணித்தியாலங்கள் ஆறடிக் கிடங்கில் படுத்திருந்து சாதனை புரிந்தார். இத்துறைசார்ந்த கலைகளைக் கற்று மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றார். 1996 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கராத்தேயை முழு வீச்சுடன் கற்பித்து வருகின்றார். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கைவேலி, வள்ளிபுனம், விசுவமடு, கொக்குத்தொடுவாய், கிளிநொச்சி, வவுனியா, உரும்பிராய், தெல்லிப்பழை, மானிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை எனப் பல இடங்களில் கராத்தே பயிற்றுவித்து வருகிறார். 1995 ஆம் ஆண்டு தமிழகக் பொலிஸாரினால் சிறந்த விளையாட்டு வீரன் விருதையும் பெற்றார். கராத்தே கலையில் அதி சிறந்தவர்களுள் ஒருவராகத் திகழும் கராத்தே மாஸ்டர் சூசைநாதர் யசோதரன் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.**

**❖ கராத்தேவில் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

நான் 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8 வயதில் எம் ஊர் மக்கள், என் சொந்தங்கள் எல்லோரும் முதல்முதலாக கராட்டி என்று பட்டப்பெயர் வைத்தார்கள். காரணம் அந்த வயதில் புரூஸ்லியின் படம் என்றால் எனக்கு ஒரு பைத்தியம். ஒரு நாள் பாடசாலை முடிந்து வீடு செல்லாமல் எனது வீட்டுக்கு பக்கத்து வீட்டில் புரூஸ்லியின் படம் பார்க்க சென்று இரவு 7 மணிக்குத் தான் வீடு வந்தேன். என்னைக் காணவில்லை என்று என் ஊர்மக்கள், என் சொந்தங்கள் எல்லோரும் தேடி எனது வீட்டில் ஒன்றுகூடி அழவெளிக்கிட்டார்கள். என்னைக் கண்டவுடன் எல்லோரும் ஆனந்தத்துடன் கட்டிப் பிடித்து தூக்கி எங்கு சென்றாய் என்று கேட்ட பொழுது அசோக் அண்ணை வீட்டை கராட்டி படம் பார்த்துவிட்டு வாறேன் என்று நான் கூறினேன். செல்லமாக சொன்ன கதையை கேட்ட எல்லோரும் சிரித்து அன்றிலிருந்து முதல் முதலாக கராட்டி என்று பட்டப்பெயர் வைத்து இன்றுவரைக்கும் எனது உறவுகள் என் னைக் கூப்பிடுவார்கள்.

அதன் பிறகு 1988 ஆம் ஆண்டு நாட்டுப் பிரச்சினை காரணமாக குடும்பமாக இந்தியா சென்று ஒரு மாதத்திலேயே எனது அப்பாவை கூட்டிக் கொண்டு செய்யார் என்னும் ஊருக்குச் சென்று முதல்முதலாக கராட்டி வகுப்பில் சேர்ந்து கராட்டி பழகினேன். அத்துடன் எனது முதல் மாஸ்ரர் எனது அப்பாதான். எனக்கு சிறுவயதில் சிலம்பம், லொக்ஸ் றெசிலிங் என்று சில விளையாட்டுக்களை பழக்கினார். அத்துடன் கராட்டியை இந்தியாவில் நான்கு வருடம் பழகினேன். எனது வகுப்பில் சிலோன் மாணவன் என்றால் நான் ஒருவன்தான். என்னை எனது கராத்தே ஆசிரியர் சிலோன் பாபு என்றுதான் அழைப்பார். அதன் பிறகு 1992 ஆம் ஆண்டு நாங்கள் இலங்கை வந்து கேப்பாப்புலவில் வசித்து வந்தோம். அப்பொழுதுஎனது அப்பாவின்தம்பியான இம்மானுவேல் சித்தப்பாவிடம் சான்டோ பழகி முதல் மேடையில் மார்பின் மீது லொறி ஏற்றினேன். பின்பு இரண்டாவது மேடையில் மூன்று மணித்தியாலங்கள் 6அடி கிடங்கில் படுத்திருந்து சாதனை புரிந்தேன். அதன் பிறகு எக்ஸ்சர்காய் கராட்டி கிளப்பில் இணைந்து முழுமையாகப் பழகி குருப்பட்டம் பெற்று சுமார் 500 மாணவர்களுக்கு 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் கராத்தே கலையை பயிற்றுவித்து வந்தேன். அதன் பிறகு சோட்டோகான் கராத்தே கலையையும் 3ஆவது கறுப்புப் பட்டி வரை கற்று முடித்தேன். இந்தக் காலப் பகுதியில் றென்சாக், சாய், டொன்பா றெசிலிங், லொக்ஸ், வாள், அருள்வாள், டைவு, சான்டோ இப்படியாக 12 கலையை கற்று மாணவர்களுக்கும் கற்பித்து வந்தார். இதன் பிறகு 1998 ஆம் ஆண்டு திருமணம் முடித்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்தில் 100 மாணவர்களுக்கு 2002 ஆம் ஆண்டு வரை இக்கலையை பழக்கி நாட்டுப் பிரச்சினை காரணமாக சிறிது காலம் இடைநிறுத்தி விட்டேன். பின்பு 2010 ஆம் ஆண்டு Goshin isshin-ryu karate கிளப்பில் இணைந்து முத்துச்சாமி ராமதாஸ் மாஸ்ரர்(லண்டன்) அவரிடம் 3ஆவது கறுப்புப் பட்டி வரை பழகி இன்று Goshin isshin-ryu கராத்தே கிளப்பிற்கு Chief Instructor (Sri Lanka) ஆக இருந்து வருகின்றேன்.

**❖ நொக்கவுட் பயிற்சி தொடர்பில்?**

கிட்டத்தட்ட 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் எக்ஸ்சர்காய் Karate பழகிய போது இக்கராத்தேயின் Fight open fight அதாவது எதிரியை காயப்படுத்தி நொக்கவுட் பண்ணுவது. இப்படியான பயிற்சியையும் நான் நன்றாக கற்று அதில் தேர்ச்சி பெற்றிருந்தேன். பின்பு Goshin isshinryu karate ராமதாஸ் Master ரிடம் International Rules பயிற்சியை கற்று International Refree Course முடித்து தற்பொழுது Sports பயிற்சியையும் Technical பயிற்சியையும் சிறந்த முறையில் கற்றுக்கொடுத்து World Tournament இல் பங்குபற்றுவதற்குரிய முறையில் எனது மாணவர்களுக்கு பயிற்றுவித்து வருகின்றேன்.

**❖ சிலம்பம்-வெப்பன் கலைகள் பழகியது பற்றிக் கூறுங்கள்?**

நான் ஏழு வயதில் எனது அப்பர்விடம் சிலம்பம் கற்று வந்தேன். பின்பு சிலம்பத்தின் ஆசான் சோதிசிவம் மாஸ்ரரிடம் சிலம்பம், வாள், சுருள்வாள் இந்த மூன்று கலை களையும் முறைப்படி கற்றேன். தற்போது அவர் இறந்துவிட்டார். இந்த கலைகள் தமிழர்களின் பாரம்பரிய கலைகள் என்பதனால் இதனை நான் விரும்பிப் பயின்றேன். நான் இக்கலைகளைப் பயிலும் போது எனது ஆசானுக்கு 75 வயது. அவரிடம் கடைசியாகக் கற்றதற்கு நான் பெருமைப்படுகின்றேன். ஏனென்றால் அவர் எனது தந்தையின் ஆசானும் ஆவார். பின்பு Wresting கலையையும் யோசு மாஸ்ரரிடம் பயின்றேன். இக் கலையின் மறு பெயர் குஸ்தி என்பதாகும். பின்பு சாய், டொன்போ, வோ இப்படியான பல வெப்பன்ஸ் கலைகளையும் Renshi Ramethas மாஸ்ரரிடம் பயின்றேன். அத்தோடு, லெக்ஸ் சான்டோ பயிற்சியை எனது சித்தப்பாவிடம் (இம்மானு வேல்) பழகி வந்தேன். மற்றும் டைவு, நென்சாக் இப்படியான கலைகளை கராத்தே மாஸ்டர் ராஜுவிடம் பழகினேன். அத்துடன்சிலம்பத்தில்கத்திகுத்துகலையை லெக்ஸ் ஆறுமுகம் ஆசான் (தற்பொழுது இறந்துவிட்டார்) அவரிடமும் பயின்று வந்தேன். இப்படி பல ஆசான்களிடம் எனது இளம் வயதி லிருந்தே பல கலைகளை பயில்வதற்கு சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் எனக்கு கிடைத்தன.

**❖ தாங்கள் கராத்தே கலையினை பயிற்றுவிக்கும் இடங்கள் எவை?**

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கைவேலி, வள்ளிபுனம், விசுவமடு, கொக்குத்தொடுவாய், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், உரும்பிராய், தெல்லிப்பழை, மானிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை என இக் கலையை எமது தேசம் முழுவதும் பயிற்றுவித்து வருகின்றேன். நான் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்று கலையை கற்று கொடுத்து வருகின்றேன். எவ்வளவு இடங்கள் இருந்தாலும் கற்றுக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம்.

**❖ வட மாகாணத்திலிருந்து தேசிய மட்டத்தில் பெரிய அளவிலான வெற்றிகள் கிடைக்காததற்கு என்ன காரணம்?**

என்னுடைய கணிப்பின்படி வட மாகாணத்திலுள்ள அனைத்து கராத்தே மாணவர்களிலும் அதீத திறமைகள் உண்டு. ஆனால் அவர்களுக்கு சரியான நுட்பத்துடனும் நுணுக்கமாகவும் போட்டிகளின் சரியான விதிமுறைகளை கடைப்பிடித்து அவர்களின் மாகாண மட்ட தேர்வை வெளிமாவட்ட ஆசிரியர்களை கொண்டு தேர்வு செய்து அதில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு International Rules களை கற்றுக் கொடுத்து தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்றால் நிச்சயம் எமது வட மாகாணத்தில் கராத்தேயில் பெரிய அளவிலான மாற்றம் நிகழும்.

**❖ கராத்தே கலையில் தாங்கள் பெற்ற வெற்றிகள் பற்றி?**

Isshinryu World Karate Pederations 3rd Dan இல் சான்றிதழ்கள், வெற்றிச் சின் னங்கள் பெற்றுள்ளேன். World Union of Karate Do Pederations 3rd Dan இல் சான்றிதழ்கள், வெற்றிச் சின்னங்கள் என பல பரிசுகள் பெற்றேன். Gosshin Isshisryu Karate UK 3rd Dan இல் சான்றிதழ்களிஇ உயர்ந்த நிலைகளை அடைந்தேன்.

1995ஆம் ஆண்டு சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருது தமிழக பொலிஸாரால் வழங்கப்பட்டது. மற்றும் நான்கு வருடங்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கராத்தே தேர்வின் சிறந்த விளையாட்டு வீரர் என்ற பட்டத்தை எட்டு தடவைகள் எனதாக்கிக் கொண்டேன். மேலும் எனது மார்பின் மீது லொறி ஏற்றி விருது பெற்றேன். மூன்று மணித்தியாலங்கள் மூடிய கிடங்கிலிருந்து சாதனை செய்து விருது பெற்றேன்.

**❖ கராத்தே கலையில் தங்களால் மறக்க முடியாத சம்பவம்?**

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பில் கராத்தே கழகங்களினால் அனைத்து கராத்தே கழங்களுக்குமான போட்டிகள் நடைபெற்றன. இதில் எக்ஸ் சர்காய் கராத்தே கழகத்தினர் பங்குபற்ற முடியாது என ஒரு சட்டத்தை கராத்தே சம்மேளனத்தினர் அறிவித்தார்கள். அந்த நேரம் ராஜு மாஸ்டர் எக்ஸ்சர்காய் கராத்தே கிளப்பை நடத்தி வந்தார். நான் அவரிடம் இருந்து பிரிந்து தனியாக முந்நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வந்தேன். சோட்டோகான் தீசன் மாஸ்டரும் இணைந்து இருவருமாக பயிற்சி அளித்தோம். அப்போது நானும் மாணவர்களை போட்டிகளில் பங்குபற்று திறம்பட விளையாடி பல வெற்றிகளை பெற்றார்கள். கடைசியாக நான் கறுப்புப் பட்டி போட்டிக்காக களமிறங்கினேன். என்னை அனைத்து மாஸ்டர் களும் கூடி முடிவெடுத்து நான் ஒப்பின் பைற்றர் என்று போட்டி யில் பங்கு பெற முடியாது என மறித்தார்கள். கார்ணம் நான் எக்ஸ் சர்காய் கராத்தே என்றும் நொக்கவுட் பயிற்சியாளர் (Knock out Fighter) என்றும் எனக்கு எவ்வித அங்கீ காரமும் இல்லை என்றும் பல குறை களை கூறி மறித்து விட் டார்கள்.

அனைத்து மாஸ்டர்களும் என்னை கைவிட்டு கேள்விக்குறியாக நின்ற வேளை கடவுள் போன்று என்னுடைய மாஸ்டர் Renshi Ramathas அவர்கள் என்னை சந்தித்து எனக்கு பலகலைகளை மென் மேலும் கற்றுத் தந்து கராத்தே பற்றிய சரியான படிப்பையும் கற்றுக் கொடுத்து International Refree நூல்களை படிக்க வைத்து இலங்கை மட்டுமன்றி ஜப்பான், அமெரிக்கா, லண்டன் என்று உலகம் முழுவதுமாக எனக்கு அங்கீகாரம் பெற்றுத் தந்து நல்லதொரு நிர்வாக கட்டமைப்பையும் ஏற்படுத்தி தந்து எனது வாழ்க்கைக்கும் நிதியுதவி செய்து மாணவர் என்ற பார்வையில் என்னை நோக்காது தோழனாக அவர் என்னுடன் பழகி என்னை இன்று வரை அரவணைத்து நல்வழிநடத்தி அனைத்து கலைக்குரிய பெருமிதமில்லாமல் சிறந்த ஆசானாக இன்று எங்கள் அனைவரையும் ஒரு தந்தையைப் போல் வழிநடத்தி வருகின்றார். எனது மாஸ்டர் ராமதாஸ் அவர்களுடைய செயற்பாடுகளை என் வாழ்நாள் முழுவதுமாக மறக்க முடியாத சம்பவமாக என் கடைசிக்காலம் வரை அவர்தான் மறக்க முடியாத உறவும் சம்பவமும் ஆகும்.

**❖ இறுதியாக நீங்கள் கராத்தே உலகிற்கு மனந்திறந்து கூற விரும்புவது?**

ஒரு மனிதன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அவன் அன்னை வளர்ப்பில் தான் உள்ளது. இன்று பதினைந்து, பதினாறு வயதுடைய சிறிய பிள்ளைகள் தான் வாள்வெட்டு, ஆட்கடத்தல், பெண் பிள்ளைகளுடன் பிரச்சினை, களவு, சிறுவர் துஷ்பிரயோகம் என்று ரவுடிகளாக மாறி வருகிறார்கள். இவர்களின் இந்த மாற்றத்திற்கு இவர்களின் பெற்றோர்கள், வழிகாட்டிகளின் வளர்ப்புத்தான் காரணம். ஏனென்றால் நான் கூறும் அனைத்து விடயமும் எனது அனுபவத்திலிருந்து தான் கூறுகின்றேன். இன்று எல்லோரின் மனதிலும் கராத்தே ஏன் பழகுவதென்றால் எனக்கு எவராவது அடிக்க வந்தால் அவர்களிடமிருந்து என்னை நானே பாதுகாத்து கொள்வதற்காக என்று உடனே பதிலளிப்பார்கள். ஆனால் நான் கூறுகின்றேன். அது அவ்வாறில்லை. எமது உடலை நோய் என்னும் எதிரியிடமிருந்து பாதுகாத்து கொள்வது தான் தற்காப்புக் கலையின் முதல் நோக்கமாகும். நாம் கராத்தே பழகுவது அடிபடுவதற்கு மாத்திரமல்ல. உடல் ஆரோக்கியமாகவும் இளமைத் தோற்றத்துடனும் சமுதாயத்தில் நல்ல மரியாதையுடனும் எந்தவித குடிப்பழக்கங்களுமின்றி பெரியோர்க்கு மரியாதை அளித்து எமது குடும்பத்தையும் குடும்பப் பொறுப்புக்களையும் மன உறுதியுடன் ஏற்படும் அனைத்து பிரச்சினைகள், சவால்களில் இருந்தும் எம்மை பாதுகாத்து சமூக சேவையாளர்களாகவும் நாட்டிற்கு ஒரு நல்ல மனிதனாகவும் கடவுளிற்கு உகந்த பிள்ளையாகவும் வாழ்வதற்குமாகும். இந்த முறையில் இன்னும் எமது மக்கள் அறியவில்லை. எனவே மக்களே கராத்தே கலையை வயது வித்தியாசமின்றி சிறியோர் முதல் பெரியவர் வரை என்று அனைவருமாக கிழமைகளில் இரண்டு நாட்கள் ஒவ்வொரு மணித்தியாலம் உங்கள்உடல்ஆரோக்கியத்திற்காகஒதுக்கிஉங்கள் வாழ்நாள் முழுவதும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு வாழும் கலையான எங்களுடைய மூதாதையர் விட்டுச் சென்ற சொத்தான இக்கலையை கற்று பயன் பெற வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து
# கிழக்குப் பல்கலை. திருமலை வளாக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்







(திருமலை)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தை நேற்றுமுன்தினம் திருகோணமலை பல்கலைக்கழக கோணேசபுரி வீதியை மறித்து முன்னெடுத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருகோணமலை பல்கலைக்கழக புதிய விஞ்ஞானபீட கட்டடத் திறப்பு விழா மற்றும் கேட்போர் கூடத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற வேளையிலேயே இவ்வாறு வீதிமறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரியே இந்த போராட்டம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த வீதியை தவிர்த்து பல்கலைக்கழக வளாகத்தின் பின் பகுதியிலுள்ள மைதானத்திற்குள் ஹெலியில் வந்து பின் வழியால் குறித்த விழாவில் பங்கேற்று விட்டுச் சென்றுள்ளார்.

நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற முன்பும் நிகழ்வின் பின்பும் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

மேலும், நிகழ்வுகளில் ஏனைய விருந்தினர்கள் மாற்று வழியினைப் பயன்படுத்தினர். கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட விசேட அதிரடிப்படையினர் என பலத்த பாதுகாப்புடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந் நிகழ்வில் கலந்து கொண்டார். (இ-7)

# சம்பள அதிகரிப்பு குறித்து நாடாளுமன்றில் குழப்பம்

(கொழும்பு)



பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என கட்சித் தலைவர் அனைவரும் இணக்கம் தெரிவித்தனர்.

யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்ததையடுத்து சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இதன்போது அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிப்பதனை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றக்குழு நிராகரித்தது. இதனை இந்த சபையில் முன்வைக்கின்றேன்.

அத்துடன் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைத்து கட்சி தலைவர்களும் சம்பள அதிகரிப்புக்கு ஆதரவு தெரிவித்தனர் என்றார்.

இதன்போது கூட்டு எதிர்க்கட்சியினர் அனைவரும் எதிராக கோஷமிட்டு எதிர்ப்பு வெளியிட்டதையடுத்து உங்களுக்கு சம்பள அதிகரிப்பு தேவையில்லையா? என அமைச்சர் லகஷ்மன் கிரியெல்ல கூட்டு எதிரணியை பார்த்துக் கேட்டார். அதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் எமக்கு தேவையில்லை எனக் கோஷமிட்டனர் (இ-7)





நீண்டகாலமாக கண்பார்வைக் குறைபாடு காரணமாக பல அசௌகரியங்களை எதிர் கொண்டு வந்த ஊர்காவற்றுறை பிரதேசத்தை சேர்ந்த பார்வை குறைந்த நோயாளர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முயற்சியால் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சின்னமடு மாதா சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் குறித்த பார்வைக்கோளாறால் பாதிப்புற்ற 29 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஆயுத விவகாரம் தொடர்பில் அவைத் தலைவரிடம் கோரிக்கைவிட அமைச்சர் அனந்தி நடவடிக்கை

(சாவகச்சேரி)




என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா? இல்லையா? என்பதை சாவகச்சேரி பொலிஸார் ஊடாக தகவலைப் பெற்று சபைக்கு சமர்ப்பிக்குமாறு அவைத் தலைவரை கேட்டுக் கொள்ளப் போவதாக வட மாகாண சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு இது தொடர்பான தகவலைப் பெற வந்த போதே ஊடகவியலாளர்களிடம் அனந்தி இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாணசபை சட்டத்தின் பிரகாரம் சபையில் நடக்கும் செயற்பாடுகளுக்கு பொலிஸாரோ அல்லது நீதிமன்றமோ நடவடிக்கை எடுக்க முடியாது என்ற வகையில் இந்த விவகாரத்தில் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்ற தகவலைத் தெரியப்படுத்தி உள்ளனர். நான் நினைக்கிறேன் என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதை உறுதிப்படுத்துமாறு அவைத்தலைவர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பாராக இருந்தால் அது தொடர்பான விசாரணைகளை/ஆய்வுகளை பொலிஸார் செய்ய தயாராக இருப்பார்கள். எனவே அடுத்த கட்ட நடவடிக்கையாக என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா?இல்லையா? என்பதை சாவகச்சேரி பொலிஸார் ஊடாக தகவலைப்பெற்று சபைக்கு சமர்ப்பிக்குமாறு நான் அவைத் தலைவருக்கு கடிதம் ஒன்றினை எழுதப் போகின்றேன். பொலிஸார் அவைத் தலைவரிடம் இது தொடர்பாக கேட்ட போது சபை நடவடிக்கைகளை பொலிஸாரோ நீதி மன்றமோ கேள்விக்கு உட்படுத்த இயலாது என்ற தகவலை கூறி இருக்கின்றார்.

ஆனால்அவைத்தலை வர் இந்த இடத்தில் என்னு டைய விடயம்தொடர்பாக மக்க ளுக்கு ஒரு தெளிவூட்டலை செய்வதற்காக பொலிஸாருக்கு ஒரு கோரிக்கையை முன்வைப்பாராக இருந்தால் இது தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்ள தயாராக இருப்பார்கள் என அனந்தி மேலும் தெரிவித்துள்ளார்.(இ-30-89)

# வீர வசனம் பேசும் 70பேர் ஏன் 23 பேருக்கு அஞ்ச வேண்டும்
## கூட்டு எதிரணியிடம் அநுரகுமார கேள்வி

(கொழும்பு)



மக்களின் பலத்தை நிரூபித்துள்ளதாகக்கூறும் 70 பேர் அணி பலத்தைக் காட்டி ஆட்சியை கைப்பற்றுவதை விடுத்து எதிர்க்கட்சிப்பதவிக்கு ஏன் போராடுகின்றார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சி பதவி குறித்து பாராளுமன்றில் நேற்றுமுன்தினம்விவாதிக்கப்பட்டபோதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தரக்கோரி பொது எதிரணியினர் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதற்கு முன்னர் ஆரம்பத்தில் 42 உறுப்பினர்கள் இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவர்பதவியைக் கேட்டனர், 54 பேர் இருந்த போதும் எதிர்க்கட்சிப் பதவியைக் கேட்டனர். இப்போது 70 பேர் உள்ள போதும் எதிர்க்கட்சிப் பதவியை தரக்கோருகின்றனர். ஆனால் இவர்களின் கோரிக்கையில் எந்தவித அடிப்படை நியாயப்பாடுகளும் இல்லை.

இந்த பாராளுமன்றத்தில் ஆறு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் உள்ளன. அந்த கட்சிகளில் இருந்தே உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 19 ஆம் திருத்தத்துக்கு அமைய கட்சித் தன்மைகளை கைவிட்டு செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டால் எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிலைமை உருவாகும்

இப்போதுள்ள நிலைமையில் எதிர்க்கட்சியின் எண்ணிக்கை குறைவுதான். மூன்று கட்சிகளுமாக மொத்தமாக 23 பேர் தான் உள்ளோம். நாம் பலம் குறைந்த எதிர்க்கட்சி தான். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் பலவீனமாகவே நாம் உள்ளோம். ஆனால் பாராளுமன்ற விதிமுறைக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான எதிர்க்கட்சியாக செயற்பட முடியாது என ஒருபோதும் கூற முடியாது.

பொது எதிரணியினர் தமக்குத் தான் மக்கள் பலம் உள்ளதாகக் கூறுகின்றனர். 70 பேர் எதிர்க்கட்சியாக உள்ளதாகக் கூறுகின்றனர், முன்னாள் ஜனாதிபதி ஒருவர் உள்ளார், அனுபவம் மிக்க தலைவர்களை தக்கவைத்துள்ளதாக கூறுகின்றீர்கள். இவ்வளவு வீர வசனம் பேசும் 70 பேர் ஏன் 23 பேருக்கு அஞ்சி செயற்படவேண்டும். உங்களின் பலத்தைக்காட்டி அரசாங்கத்தை விட்டு வெளியேறி எதிர்க்கட்சியில்அமர்ந்து கொண்டு கட்சியைக் கைப்பற்ற முடியுமே. அதை விடுத்து ஏன் 23 பேர் உள்ள அணியில் தஞ்சம் புகுந்துகொண்டு செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள் என அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பினார். (இ-7)







டி.டி.வி.தினகரன் அணி

# கலைஞர் கருணா

## தலைவர்கள், ...


பிரதமர் மோடி


தமிழக முதல்வர்


தமிழக ஆளுநர்







மேற்கு வங்க முதல்வர்




தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், திராவிட முன்னேற்றக்
முன்தினம் காலமானார். அவருடைய உடல் நேற்றைய தினம் செ
இதில் பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தமிழக மு
வங்க முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட அரசியல் தலைவர்களு
கவிஞர் வைரமுத்து போன்ற திரையுலகப் பிரபலங்களும் இலட்சக்கண

# இப்போதாவது அப்பா என அழைக்கட்டுமா தலைவரே

## மகன் ஸ்டாலின் உருக்கமான கடிதம்





(சென்னை)

ஒரே ஒருமுறை இப்போதாவது அப்பா என அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே என தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் உருக்கமாகக் கடிதம் எழுதியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை ஸ்டாலின் பெரும்பாலும் தலைவர் என அழைப்பது வழக்கம்.

இந் நிலையில், ஒரே ஒரு முறை இப்போதாவது அப்பா என அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே என தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் கண்ணீருடன் உருக்கமாக கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். (7)

# தி.மு.க.தலைவர் கலைஞர் கருணா...
# பாரத ரத்னா விருது வழங்க வே...
## தொல்.திருமாவளவன் வேண்டுகோள்

(சென்னை)

அனைத்து துறைகளிலும்சாதனை படைத்த தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும்என தொல் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது.




அன்னைத் தமிழைக் காப்பதற்காக ஆவேச நெருப் பாய் ஆர்த்தெழுந்து, அர சியல் களத்தில் தமிழ்க்கொடி ஏந்தி அகவை


# ாநிதி காலமானார்

## கள், தொண்டர்கள் திரண்டு அஞ்சலி








நடிகர் ரஜனி




கி.வீரமணி



ராகுல் காந்தி




நடிகர் கமல்



நடிகர் அஜித்



ப.சிதம்பரம்





கவிஞர் வைரமுத்து



நடிகர் தனுஸ்

ஏற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி நேற்று னம் சென்னை ராஜாஜி அரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மிழக முதல்வர் பழனிச்சாமி, தமிழக ஆளுநர் பன்வாரியால், மேற்கு வர்களும் நடிகர் ரஜனிகாந்த், நடிகர் கமல்ஹாசன், நடிகர் அஜித், சக்கணக்கான தொண்டர்களும் கண்ணீரமல்க அஞ்சலி செலுத்தினர்.


# ருணாநிதிக்கு க வேண்டும்

பதினான்கில் அடியெடுத்து வைத்தவர் அரசியலறிஞர் கலைஞர். பள்ளிக்குச் செல்லும் பால பருவத்தில் போருக்குச் செல்லும் படைவீரனாய்ப் பொது வாழ்வைத் தொடங்கிய போராளித் தலைவர் கலைஞர்.

அவர் அண்ணாவுக்குத் தம்பி அதனால், எதையும் தாங்கும் இதயம்! அவர் பெரியாருக்குப் பிள்ளை அதனால், போர்க்குணத்தில் இமயம்! அவர் தமிழுக்குத் தொண்டர் அதனால் தமிழினத்துக்குத் தலைவர்! "தமிழுக்குத்தொண்டு செய்வோன் சாவதில்லை" என்னும் தலித்துகள், பழங்குடிகள், மகளிர், சிறுபான்மையினர், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத்திறனாளிகள் போன்ற விளிம்புநிலை மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், தமிழுக்கு, தமிழருக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழீ ழத்துக்கு, மாநில உரிமைகளுக்கு என தனது வாழ்வை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட மாமனிதர் ஆவார். அவரது இழப்பு தமிழ் நாட்டுக்கு மட்டுமின்றி இந்திய தேசத்துக்கே பேரிழப்பாகும்.

வரலாற்றுத் தலைவர் கலைஞருக்கு இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை வழங்கிச் சிறப்பித்திட வேண்டு மென விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம் என்த் தெரிவித்துள்ளார். (7)

# தி.மு.க.தலைவர் கருணாநிதி உடலுக்கு தேசியக்கொடி போர்த்தி அரச மரியாதை



(சென்னை)

ராஜாஜி அரங்கத்தில் வைக்கப்பட்ட தி.மு.க. தலைவர் கருணாநிதி உடலுக்கு தேசியக் கொடி போர்த்தி அரச மரியாதை செலுத்தப்பட்டது.


காவேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் மாலை 6.10 மணிக்கு காலமானார்.

இதனை அடுத்து, ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல தலைவர்கள் அவரது மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி உடலுக்கு முப்படை வீரர்கள் தேசியக் கொடி போர்த்தி அரச மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (7)

# எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுடன் எமக்குத் தனிப்பட்ட கோபம் இல்லை

## மகிந்த அணியின் தலைவர் தினேஷ் விளக்கம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மீது எமக்கு எந்தவொரு தனிப்பட்ட கோபமும் இல்லை. ஆசன அடிப்படையில் எதிர்க்கட்சியில் எமக்கே அதிகளவில் ஆசனங்கள் உள்ளன. ஆகவே, நீதியான முறையின் பிரகாரம் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை எமக்கே பெற்றுத்தர வேண்டும் என கூட்டு எதிர்க் கட்சியின் (மகிந்த அணி) தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் பதவி தொடர்பான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் எமக்கே அதிகளவிலான ஆசனங்கள் உள்ளன. தற்போது எமது குழுவில் 70 பேர் உள்ளனர். ஆகவே எதிர்க்கட்சி தலைவர் பதவியை எமக்கே பெற்றுத் தர வேண்டும் என நாம் கோரி எழுத்து மூலம் கடிதமொன்றை சபாநாயகரிடம்கையளித்தோம்.

இதன்போது உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக கூறியிருந்தீர்கள். புதிய தீர்மானமொன்றை வழங்குவதாகவே கூறினீர்கள். ஆனால் எங்கே தீர்மானம். எதிர்க் கட்சித் தலைவர் பதவியை எமக்குப் பெற்றுத்தர வேண்டும்.

இரா.சம்பந்தனுடன் எமக்கு தனிப்பட்ட பிரச்சினை இல்லை. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் அவருக்கு கீழ் நாம் செயற்பட்டுள்ளோம். ஆகவே சம்பந்தன் எமக்கு பிரச்சினையில்லை. எனினும் பாராளுமன்றத்தில் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். சம்பிரதாயத்தை மீறி செயற்படக் கூடாது. பாராளுமன்றத்தின் ஜனநாயகம் தற்போது செல்லாக்காசாக மாறி விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டுமென்றால் அரசாங்கத்தை விட்டு வெளியில் வாருங்கள்

## கூட்டு எதிரணிக்கு சுமந்திரன்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் ஆளும் தரப்பாக பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சி பதவி வேண்டும் என்றால் அவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

'பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்து குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் வெவ்வேறு கட்சிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஒரு தரப்பினர் எதிரணியில் அங்கம் வகிக்கின்றனர். எனினும் அவர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகவே உள்ளனர். அவ்வாறு இருக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தரக் கோருகின்றனர். ஆனால் இது சாத்தியமற்றதாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 23 பேர் அமைச்சரவையில் உள்ளனர். அரசாங்கத்தின் தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர் ஆகையால் அதேஅணியை எதிர்க்கட்சியாக அங்கீகரிக்க கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனநாயக சீர்திருத்தங்களை மேம்படுத்த இலங்கைக்கு சுவிஸ் ஆதரவளிக்கும்

## அந்நாட்டு நீதியமைச்சர் கொழும்பில் வாக்குறுதி



(கொழும்பு)

ஜனநாயக சீர்திருத்தங்களை மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவை அதிகரிப்பதற்கு சுவிற்சர்லாந்து திட்டமிட்டிருப்பதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அந்நாட்டின் நீதியமைச்சர் சிமொனெட்டா சொமருகா தெரிவித்ததாக நீதியமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடனான குடிப்பெயர்வு ஒத்துழைப்பு உடன்படிக்கையை விரிவுபடுத்துவதற்கும் அவர் இணங்கியிருக்கிறார். இது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்துறை அமைச்சர் எஸ்.பி.நாவின்னவுடன் அவர் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டார்.

மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் தொழிற்பயிற்சித் திட்டங்களூடாக இலங்கையில் இளைஞர்-யுவதிகளுக்கான சிறந்த வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமான நிபந்தனைகளை வகுப்பதாக இக் குடிப்பெயர்வு ஒத்துழைப்பு செயற்பாடுகள் அமைகின்றன என்று சொமருகா தெரிவித்தார்.

அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.ஆகியோரையும் மற்றும் அரசாங்க அமைச்சர்கள், தேசிய மனித உரிமைக் குழுவின் பிரதிநிதிகள், பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

நான்கு நாள் விஜயத்தின் போது உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான நல்லிணக்கச் செயன்முறைகள் தொடர்பில் நேரடியான தகவல்களைப் பெறவுள்ளார். குறிப்பாக வளைகுடா நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளுக்குத் தொழிலாளர் குடிப்பெயர்வு குறித்து ஆராயவுள்ளார். அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் நிறுவனத்தின் குடிப்பெயர்வு செயற்றிட்ட அலுவலகத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பியனுப்புவது தொடர்பான இருதரப்பு குடிவரவு உடன்படிக்கை ஒன்றில் 2016 ஆம் ஆண்டு இலங்கையும் சுவிட்சர்லாந்தும் கைச்சாத்திட்டிருந்தன. சுவிஸில் சுமார் 51,000 இலங்கையர்கள் வசிக்கின்றார்கள். அவர்களில் அரைவாசிப் பேர் சுவிஸில் பிரஜாவுரிமை பெற்றுள்ளனர் என நீதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பிறரையே காரணம் சொல்வதா?

''நீங்க ஏன் பட்டதாரி ஆகலை?'' ''எங்க அம்மா, அப்பா என்னைப் படிக்க வைக்கலல''. ''தொழிலில் நட்டமாமே ஏன்'' எனக்கு அமைஞ்ச பாட்னர் சரியில்லைங்க''. ''விவாகரத்து வாங்கிட்டீங்களாமே?'' ''எனக்கு வந்து வாச்சவ அப்படி?'' ''என்னங்க ஆக்சிடன்டாமே?'' ''ஆமாங்க மடத்தனமா வந்து மோதிட்டானுங்க''

முதலாமவரின் பெற்றோரைக் கேளுங்கள், அவன் படிச்சாதானுங்க படிக்க வைக்கலாம் என்று ஆரம்பிப்பார்கள். மாபெரும் மேதைகளின் வரலாற்றைப் புரட்டுங்கள். எல்லோருமா பெற்றோரின் உதவியுடன் படித்தார்கள்?

ஒன்றை நம்புங்கள். ஒரு மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவன் தான் முழுக்கமுழுக்க காரணம். மற்றவர்களும் சூழ்நிலைகளும் சிறுசிறு காரணங்களே!

ஒருவன் தன் பணத்தை பிக்பொக்கெட் மூலம் பறிகொடுத்தால் அதற்கு அவன்தான் காரணம்.

பணத்தை எடுத்துச் செல்லப் பாதுகாப்பான வழிகளை நாடாததும் பிக்பொக்கெட் அடிக்கும் வரை கவனக்குறைவாக இருந்ததும் இவனது தவறு.

நீரிழிவுக்காரர் ஒருவரின் காலை நீக்கிவிட்டால் . கேட்பவர்களிடம் இவர், அந்த டாக்டர் தேவையில்லாமல் என் காலை நீக்கிவிட்டார். என்னைப் போன்ற எத்தனையோ நீரிழிவுக்காரங்க காலோடு இல்லையா?'' என்பார். நீரிழிவைக் கட்டுப்படுத்தாதும் அந்த டாக்டரிடம் போனதும் இவர் செய்த தவறுகள். டாக்டரும் ஒரு காரணமே தவிர, டாக்டர் மட்டுமே காரணமல்ல.

இனி பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் பிறரைக் காரணம் தேடிக் கண்டு பிடிப்பதை நிறுத்திவிட்டு, அதில் நாம் தான் முழுக்க முழுக்க காரணம் என்பதை ஒப்புக்கொள்ள முன்வர வேண்டும்.

எண்ணம், திட்டம் செயற்பாடு இவை சரியில்லாதவர்கள் தாம் பிறரைக் காரணமாகச் சொல்கிறார்கள்.

பிறரைக் காரணம் சொல்வதை நிறுத்துவதால் இரண்டு நன்மைகள் நிகழ்கின்றன. ஒன்று நம் குறைகளை உணர்ந்து நம்மை நாம் திருத்திக் கொள்ள வாய்ப்பு உருவாகின்றது.

இரண்டாவது, வீணாக மற்றவர்களைப் பகைத்துக் கொள்வதைத் தடுத்துவிட முடிகிறதே!

**லேனா தமிழ்வாணன்**

# நீங்கள் அனைவரும் செய்தியாளராகலாம்!

செய்தியாளர்கள் என்ற எல்லை கடந்து பொதுமக்கள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் என சகலரும் செய்திகளை, தகவல்களை வழங்குகின்ற வாய்ப்பை வலம்புரி நாளிதழ் உங்கள் அனைவருக்கும் மகிழ்வோடு வழங்குகிறது.

**எந்த வேளையிலும் நீங்கள் அறிந்த செய்திகள், தகவல்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் அவற்றின் புகைப்படங்கள் என்பவற்றை 24 மணி நேரமும் வலம்புரி நாளிதழுக்கு வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டை உங்கள் வலம்புரி செய்து தருகிறது. இவ்வாறு நீங்கள் தகவல்களை, செய்திகளை வழங்குவதன் மூலம்**

- உங்கள் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள்
- உங்கள் நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்
- உங்கள் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புக்கள் புலமைப்பரிசில் திட்டங்கள்
- உயர் கல்வி நிறுவனங்களில் புதிதாக அறிமுகப் படுத்தப்படும் கற்கை நெறிகள், பயிற்சிகள்
- வங்கிகளில் மக்கள் பெறக்கூடிய குறைந்த வட்டிக் கடன்கள், இலகு கடன்கள்
- வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகின்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களைப் பெறுகின்ற வழிமுறைகள்

என்பவற்றை பொதுமக்கள் அறியவும் அதன்மூலம் நன்மை பெறவும் முடியும்.
இவ்வாறு தகவல்களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் பேருதவி புரிகின்றீர்கள்.

இதற்கு மேலாக...

- உங்கள் பிரதேசங்களில் நடக்கின்ற ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள்
- நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டிய விடயங்கள் இழுத்தடிக்கப்படும் சம்பவங்கள்
- சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
- புனரமைக்கப்படாத வீதிகள், பாலங்கள், போக்குவரத்துச் சீரின்மைகள் போன்ற பல விடயங்களையும் வெளிப்படுத்தி அவற்றைச் செப்பனிட முடியும்.

இதற்காகவே நீங்கள் அனைவரும் செய்திகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை வலம்புரி ஏற்பாடு செய்துள்ளது.
தேவையான இடங்களில் இரகசியம் நூறுவீதம் பாதுகாக்கப்படும்.

**நீங்கள் அறிந்த செய்திகளை, தகவல்களை, சம்பவங்களை, புகைப்படங்களை அனுப்புவதற்கு**

**தொலைபேசி:-021 567 1541 / 070 220 2206**
**தொலைநகல்:- 021 222 7829**
**வைபர்:- 076 636 3378**
**E-mail:- valampurijaffna@gmail.com**

**தபால் முகவரி : பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**வலம்புரியில் இணைந்து பிரதேச செய்தியாளராக பணியாற்ற விரும்பினால்**
தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை
**பிரதம ஆசிரியர், இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்தியாளருக்கான விண்ணப்பம்" எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

# ஒய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்

## கருணாநிதியின் சந்தனப் பேழையில் பொறிப்பு!






கலைஞர் கருணாநிதியின் உடல் வைக்கப்படும் சந்தனப்பேழையில் மீது எழுதப்பட்டுள்ள வாசகத்துடன் புகைப்படம் வெளியாகி உள்ளது.

குறித்த சந்தனப்பேழையில் 'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்' என்ற வாசகம் ஒரு புறமும், மறுபுறம் கலைஞர் மு.கருணாநிதி திமுக தலைவர் ஜூன் 03-1924-ஓகஸ்ட் 07-2018 என பொறிக்கப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரை அண்ணா சமாதிக்கருகில் கருணாநிதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. (இ-7)



பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்தி விநாயகர் ஆலய புளியமரத்தின் கிளை ஒன்று யானைமுக வடிவத்தில் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம்.

# முகமூடி அணிந்த குழுவின் தாக்குதலால் ஒருவர் பலி!

(கொழும்பு)


சூதாட்ட குழுவொன்றின் மீது முகமூடி அணிந்து வந்த கும்பலொன்று நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மதுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யடதொல - அளுத்கம வீதியில் மணிக்கொட பகுதியில் சூதாட்ட கும்பல் காரில் பயணித்துக் கொண்டிருந்த போதே வானில் வந்த முகமூடி அணிந்த கும்பல் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மூவரும் வாவத்த அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர்களுள் பனிகல குருளுபத்த பகுதியைச் சேர்ந்த வீரகோன் முதியன்சலாகே சுராங்க குமார (வயது-40) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் தாக்குதல் சம்பந்தமாக ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட மதுகம பொலிஸார் தாக்குதலுக்கிலக்கானவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சூதாட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வாவத்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# தமிழால் தமிழுக்காக தமிழாய் வாழ்ந்த தலைவரை தமிழ் சமூகம் இழந்து நிற்கிறது



## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இரங்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதியின் மறைவு குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கும், அந்தக் கட்சியின் தொண்டர்களுக்கும், கலைஞரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில்,

உலகெங்கிலும் வாழும் கோடானுகோடி தமிழ் மக்களின் உள்ளங்களை தம் தமிழ் இலக்கிய அறிவால் ஆட்கொண்டிருந்த தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் ஐந்து முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சர் பதவியை அலங்கரித்தவரும் அனைவராலும் முத்தமிழ் காவலர், டாக்டர் கலைஞர் என்ற அடை மொழிகளால் அழைக்கப்பட்டவருமான கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தனது 95 தாவது அகவையில் இயற்கை எய்தினார் என்ற விடயம் நேற்று முன்தினம் செவ்வாயன்று மாலை தொலைக்காட்சி ஊடாக வெளிவந்ததும் நாம் அதிர்ச்சி அடைந்தோம்.

தமிழ் மொழியின் மீது அவர் கொண்ட பற்றின் காரணமாகவும் தமிழ் மக்களின் அடையாளத்தைக் காப்பதற்காகவும் அவர் தமிழகத்தில் நிகழ்த்திய போராட்டங்கள் ஏராளம்.

அத்துடன் அவர் ஈழ மக்கள் மீது கொண்டிருந்த அன்பும் விமர்சனங்களுக்கு அப்பால் போற்றப் பட வேண்டியதே.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராக தமி ழகம் தொடர்ந்தும் குரல் கொடுத்தே வந்துள்ளது. இவை களுக்கு சிகரம் வைத்தாற் போல் 1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு உடனடியாகவே பதிலளிக்கும் வகையில் கலைஞர் அவர்கள் சென்னையில் அறிவாலயத்திற்கு முன்னால் குறுகியகால அழைப்பில் பல்லாயிரக்கணக்கான தி.மு.க. தொண்டர்களை அணிதிரட்டி இலங்கை அரசிற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், இலங்கை தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உலகறியச் செய்திருந்தார்.

கலைஞர் அவர்களுடன் 1983 ஆம் ஆண்டிலிருந்து நெருங்கிப் பழகியவர்கள் என்ற அடிப்படையில் அவர் எமது மக்கள் மீது கொண்டிருந்த அனுதாபத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. தமிழக மக்கள் தமது தலைவனை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் அத்தலைவனின் குறைகளைச் சுட்டிக்காட்டுவது அரசியல் நாகரிகமாகாது.

குறளோவியம், பண்டார வன்னியன், தொல்காப்பிய உரை போன்ற எண்ணற்ற நூல்களை எழுதியதுடன், முரசொலியில் நாளாந்தம் அன்பு உடன்பிறப்பே என்று விளித்துத் தொண்டர்களுக்கு முரசொலி நாளேட்டின் மூலம் நாட்டு நடப்பைச் சொல்லி அரசியல் வகுப்பு எடுத்தவர்.

நல்ல நினைவாற்றல் உடையவர். மேடை நாகரிகம் தெரிந்தவர். மேடையில் வீற்றிருப்போரை விளிக்கும் போதுகூட அவர்களின் உரையை மேற்கோள்காட்டி அதனூடாகவே விளிக்கும் பண்பு கொண்டவர். கருத்துக்களை செவிமடுத்து கிரகித்துசமயோசிதமாக அவற்றை அந்த மேடையிலேயே பிரயோகித்து அதனூடாக தமது கருத்துக்களுக்கு வலுச்சேர்க்கும் ஆற்றல் படைத்தவர்.

தொண்டர்களின்மீது அளவற்ற அன்புகொண்டவர். கறுப்பு ஜூலை நிகழ்வைத் தொடர்ந்து தமிழகத்தில் தடம் பதித்திருந்த அனைத்து போராட்ட அமைப்புக்களுக்கும் தனது கிளைகளினூடாக தொழிற்சாலை ஊழியர்களிடமிருந்தும் உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்தும் கிராம மக்களிடமிருந்தும் நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கினார். ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் மற்றும் ரெலோ ஆகிய போராட்ட இயக்கங்கள் 1984 இல் ஒன்றிணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கிய வேளையில் அன்று மாலை சென்னை மைலாப்பூர் மாங்கொல்லையில் மிகப்பிரமாண்டமான பொதுக் கூட்டத்தைக் கூட்டி அந்த ஐக்கிய முன்னணியை பிரகடனப்படுத்தினார்.

பின்னைய நாட்களில் அவர் எம் மீது உரிய அக்கறை செலுத்தவில்லை என்ற போதிலும் கடந்த காலங்களில் அவர் எம்மீது காட்டிய அன்பையும் அக்கறையையும் ஆதரவையும் நாம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம்.

இனி வருங்காலத்தில் எமக்கிடையிலான உறவுகள் ஆழமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

தி.மு.க. தலைவர் கலைஞரின் இழப்பு அந்தக் கட்சிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் ஒரு பேரிழப்பு. கலைத்துறை, அரசியல் துறை, இலக்கியத்துறை என்று அனைத்துத் துறைகளிலும் அவரது இழப்பால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை ஈடுசெய்வது கடினம்.

அன்னாரின் துயரத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் பங்கெடுத்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், கட்சித் தொண்டர்கள், உற்றார் உறவினர்கள், உள்ளிட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் என முன்னாள்பாராளு மன்ற உறுப்பினர் சுரேஷ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 3 விதி எண் 7

குரு, கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நாட்டிற்கு சேவை செய்வதிலேயே முழுநேரமும் ஈடுபட்டிருப்பார்கள். கற்பனை வளமிக்கவர்கள். எழுத்தும், பேச்சும் பெரும் மக்கள் கூட்டத்தையே வசியம் செய்துவிடும். எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டேயிருப்பார்கள். கதை, இலக்கியம், சங்கீதம், சினிமா போன்ற துறைகளில் ஈடுபட்டால் பெரும் புகழ் கிடைக்கும். சாதனைகள் பல செய்வார்கள். அரசியல் சாணக்கியர்கள். தனிமையை அதிகம் விரும்புவார்கள்.

ஏகாந்த வாழ்க்கை இவர்களைப் பெரிதும் கவரும். பழைமையும் புதுமையும் கலந்து காட்சியளிப்பார்கள். புரட்சிகரமான பகுத்தறிவுக் கருத்துக்களை மக்களிடம் பரப்புவார்கள். கவர்ச்சியான முக அமைப்புக் கொண்டவர்கள். எல்லோரிடமும் எளிதில் பழக மாட்டார்கள். தான் பேச வேண்டியதை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக் கொண்டு பின்னர் பேசுவார்கள். தனக்கு ஒத்துவராத காரியங்கள் பற்றி கருத்துக்கூறமாட்டார்கள். புதுப்புது அறிக்கைகளை விட்டுக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் பேச்சும் செயலும் வேறுபட்டதாகவே இருக்கும். நாட்டுப் பற்று மிக்கவர்கள். புதுமையை விரும்புவார்கள். கலை, தத்துவம், புராதனம் போன்றவற்றில் ஆராய்ச்சி மிக்கவர்கள். புதுமை விரும்பிகள்.

பிரச்சினை வரும் போது அதை பேசித் தீர்க்கும் சமாதான விரும்பிகள். தனது இன்ப துன்பங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். சாதனைப் பிரியர்கள். எழுத்தாலும் பேச்சாலும் முன்னேற்றம் அடைவார்கள். புதிய கண்டு பிடிப்புக்களை வெளியிடுவார்கள். வெளிதேசம் சென்று பொருளீட்டும் பாக்கியமுடையவர்கள். பயனுள்ள செயல்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். யானை போன்ற கம்பீரமுடையவர்கள். நிமிர்ந்த நேர்கொண்ட பார்வையுடையவர்கள். விதியினை வெல்லும் மதிநுட்பமிக்கவர்கள். பணிபுரியும் இடங்களில் விசுவாசத்துடன், பணிவுடன் வேலை செய்வார்கள். நீச்சல் ஆர்வம் உடையவர்கள்.

இவர்களில் சிலர் சிறந்த வீரர்களாக இருப்பார்கள். அடிமைத் தொழிலை விட சுயதொழிலையே பெரிதும் விரும்புவார்கள். திறமைக்கு ஊக்கம் கொடுத்து பாராட்டுவார்கள். பணத்திற்கும் புகழுக்கும் மயங்க மாட்டார்கள். நல்ல செயல் பழக்கமுடையவர்கள். வழக்கு, நீதி, நிதி போன்ற துறைகளில் அதிகமாகக் காணப்படுவார்கள். உலகம் உயர்வடைய வேண்டுமென்பது இவர்கள் கருத்து. கடமையைச் சரியாகச் செய்வார்கள். அபாயத்தை முன்கூட்டியே அறியும் திறமை வாய்ந்தவர்கள். நிலையான பல சொத்துக்கள் சேரும். தைரியசாலிகள், நல்ல யோசனைகள் சொல்லக் கூடியவர்கள். தூய்மையான உள்ளமுடையவர்கள். சுதந்திரமான மனதையும் உடையவர்கள். கடினமாக உழைத்து உயர்ந்த நிலைக்கு வருவார்கள். கடை




சிக்காலம் வரை உழைப்பார்கள். அமைதியை விரும்புவார்கள். கற்பனை வளமிக்கவர்கள், சுயமான கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடிப்பார்கள். தண்டிக்கும் மனமும், மன்னிக்கும் மனமும் இருக்கும். துன்பப்படுபவர்களுக்கு உதவும் குணம் இருக்கும். மற்றவர்களுடன் கருத்துப் பேதமிருக்கும். குடும்ப வாழ்க்கையில் அவ்வப்போது பூசல்கள் வந்து நீங்கும். வெளிதேசத் தொடர்புகள் மூலம் தனது தகுதியை உயர்த்திக் கொள்வார்கள். அதிகாரமிக்க பதவிகளை வகிப்பார்கள். எப்போதும் சிந்தனை வயப்படுவார்கள். வழுக்கை விழுந்துவிடும். ஓய்வு நேரத்திலும் சிந்தனையில் மூழ்கிக் கிடப்பார்கள். தனது கருத்துக்களை உடனுக்குடன் பிரசாரம் செய்வார்கள். யார் தவறு செய்தாலும் எழுத்தாலும் பேச்சாலும் சுட்டிக்காட்டுவார்கள். ஆழ்ந்த யோசனை, நிதான புத்தி உடையவர்கள். வெகு சில பேரை மட்டும் நெருங்கிய நண்பராக்கிக் கொள்வார்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமைந்துவிடும். பலதார அமைப்பும் தாரக்குதர்க்கம் நிறைந்த வாழ்க்கையும் அமைந்துவிடும். ஆன்மீகம் அறிந்தவர்கள். நாத்திகம் பேசும் இவர்கள் சாஸ்திர விதிமுறைகளை முறையாகக் கையாண்டு வெற்றி பெறுவார்கள்.

பொதுநலன் செய்வதாக காட்டிக் கொண்டு தன்னையும் தன் இனம், குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் நலமுடனும் வளமுடனும் வாழ வைப்பதையே குறிக்கோளாக வைத்திருப்பார்கள். சுயநலவாதிகள். இறுதிக்காலம் வரை பேச்சும் எழுத்தும் மக்களை வசியப்படுத்தும். சிறந்த கவிதை எழுதும் திறன் இருக்கும். தான் சொல்லவிருக்கும் கருத்துக்களைக் கவிதைகளாக்கிப் பிரசங்கம் செய்வார்கள். சில நேரங்களில் அவசரப்பட்டு நிதானம் இழந்து வம்புகளில் சிக்கிக் கொள்வார்கள். கம்பீரமான குரலுடையவர்கள். சிறுவர்கள், குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். விதியை வெல்லும் மதிநுட்பமறிந்தவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஓரேஞ், கத்தரிப்பூ நிறம்

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், ஓபல், வைடூரியம், முத்து.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

13



இலங்கையின் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப்பிராமி, பெருங்கற்கால குறியீடுகள் கலந்த கல்வெட்டு

“ஆதி இரும்புக் காலத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்து விளங்கிய கந்தரோடையில் 1970 களில் அமெரிக்கப் பென்சில்வேனியப் பல் கலைக்கழகத்து அரும்பொருளகத்தினர் நடத்திய அகழ்வாய்வில் இரும்புக்காலப் பண்பாட்டு எச்சங்கள் பல கண்டுபிடிக்கப்பட்ட தோடு, அவற்றுள் கானப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓட்டின் காலக்கணிப்பும் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவ் ஆய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கைகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.”

இவ் இரும்புக்காலப் பண்பாடு, இற்றைக்குச் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் இந்திய தீபகற்பத்தின் மேற்குக்கரை வழியாகத் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவத் தொடங்கியிருக்கின்றது. இரும்புக் காலப் பண்பாடு, இப்பிராந்திய மக்களிடையே பரவியிருப்பதை ஆய்வாளர்கள் கடந்த 30 ஆண்டுகாலப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு, அம்மக்கள் பற்றிய விபரங்களை வெளிக்கொண்டு வந்த போதிலும் அவர்கள் பற்றியும் அவர்களது பண்பாடுகள், இன அடையாளங்கள் பற்றியும் ஆய்வாளர்கள் மத்தியில் சில கருத்து வேறுபாடுகளும் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக, இக் காலப்பகுதியில் காணப்பட்ட தாழி சவ அடக்க முறையைக் கொண்டு அக் காலம் பெருங்கற்பண்பாட்டுக் காலம் (Megalithic culture) எனப் பரவலாக ஆய்வாளர்கள் கருதினர்.

ஆனால், தாழி சவ அடக்கம் இரும்புக்காலப் பண்பாட்டுக் கூறுகளுடன் எப்பொழுதும் காணப்படும் ஒரு பொதுவான பண்பாட்டுக் கூறாக இல்லையென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இருப்பினும், இரும்புக் காலப் பண்பாடும் பெருங்கற் காலப் பண்பாடும் பெரும்பாலும் அநேக ஒற்றுமைகளை உடைய அக்காலப் பண்பாடாகக் கொள்ள முடிகின்றது.

தாழி சவ அடக்க முறையான பெருங்கற்பண்பாடு என்பது, மட்பாண்டத்தில் செய்யப்பட்ட பெரிய தாழிகளில் மறைந்தவரின் உடலையோ, சாம்பரையோ போட்டு, அவர் பாவித்த முக்கியமான உபகரணங்களையும் அதனுள் இட்டு நிலத்தில் அடக்கம் செய்யும் முறையாகும். இந்தப் பண்பாட்டுப் பரவல் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த இரும்புக்காலத்துக்குரிய மக்கள் மத்தியில் மிகவும் செறிவாக உட்புகுந்துள்ளமையையும் அம் மக்கள் அப்பண்பாட்டுக்குரிய மக்களாக மாறுவதையும் காணமுடிகிறது.

மேலும் இப் பண்பாடு பற்றித் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஆய்வுகளை மேற்கொண்ட ஸுதர்ஸன் ஸெனிவரத்தன் அதன் முக்கிய கூறுகளை பின்வருமாறு காட்டியுள்ளார்.

“அடிப்படை உலோகத் தொழில் நுட்பம், இரும்பின் உபயோகம், மட்பாண்டச் செய்கை உபகரணங்கள், நெற்பயிர்ச் செய்கை உபகரணங்கள், நீர்ப்பாசன முறைகள், சிறுகைத் தொழில், புதிய நிலையான ஆரம்பக் குடியிருப்புக்கள், பண்ட மாற்று வர்த்தக மையங்கள், குறுநில அரசுகளின் தோற்றம், குதிரையின் அறிமுகம், புதிய சவ அடக்க முறை என்பனவாகும்”.

இவை இப் பிராந்தியங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றன.

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

குறிப்பாக இப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி கி.மு 200 வரை படிப்படியாக வளர்ச்சி பெற்று பரவியிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா போன்ற பிரதேசங்களிலும், இலங்கையில் மன்னார் பகுதியிலும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, வேலணை, காரைநகர் ஆகிய பகுதிகளிலும், வட மேற்குக் கரையில் புத்தளம், பொம்பரிப்பு பகுதிகளும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு கதிரவெளி, அம்பாறை பகுதிகளிலும் மற்றும் வன்னிப் பெருநிலப் பரப்பில் பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மாமடு, பறங்கியாறு, அநுராதபுரம் போன்ற இடங்களிலும் இப் பண்பாட்டு அம்சங்கள், அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் மத்தியில் மிகச் செறிவாகக் காணப்படுகின்றன. இப் பிரதேசங்களுக்கு வெளியே இப் பண்பாட்டுக் கூறுகள் மிகவும் அருமையாகவே சில இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மன்னார்ப் பகுதியில் ஏழு தொல்லியற் தளங்கள் இரும்புக் காலப் பண்பாட்டைக் கொண்ட இடங்களாக இதுவரை தொல்லியலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறிப்பாக மன்னார் பிரதேசத்திலுள்ள மாதோட்டப் பகுதியில் இற்றைக்குச் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே இப் பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழ்ந்திருப்பதாக சான்றுகள் காட்டி நிற்கின்றன. மாதோட்டம் ஒரு தொன்மையான நகரமாகக் காணப் பட்டபோதும், அங்கு இரும்புக் காலத் தடயங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

புராதன வரலாற்றுக்காலம் தொட்டு இப் பிரதேசம் ஒரு முக்கிய நகர மையமாக இருந்து வந்தபடியால் பெருமளவு சான்றுகள் அழிந்து போயிருக்க வேண்டுமெனத் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். இப் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1980-1984 களில் சிகாகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் தலைமையில் அங்கு அகழ்வாராய்ச்சி நடத்தப் பட்டுக் கொண்டிருந்த வேளை, எதிர்பாராத அரசியல் நிலை காரணமாக, அவ் ஆய்வு முயற்சி இடை நிறுத்தப்பட்டது. முறையான அகழ்வாராய்ச்சி இப் பிரதேசத்தில் நடத்தப் பட்டால் பல வரலாற்றுத் தடயங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

மன்னார்ப் பிரதேசம் போன்று புத்தளப் பகுதியும் மிக முக்கியமான இரும்புக்காலப் பண்பாட்டு பிரதேசமாகும். குறிப்பாக அலுத் தோம்புவ, கல்லாற்றுப் பகுதியில் உள்ள தேக்கம், மோதரகம் ஆற்றுப் பகுதியிலுள்ள பூக்குளம் போன்றவை இக் காலத்துக்குரிய முக்கிய தொல்லியற்தளங்களாகக் காணப் படுகின்றன. இங்கும் முக்கியமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆதி இரும்புக்காலத் தளங்களுள் மிக முக்கியமான இடமாகக் கருதப்படுவது வடமேற்கில் அமைந்துள்ள பொம்பரிப்பு ஆகும். இங்கு ஏறக்குறைய 8000 சவ அடக்கங்கள் இருப்பதாக மதிக் கப்பட்டுள்ளது. பொம்பரிப்பில் 1920களிலிருந்து அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றபோதும், 1970 களில் அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தினால் கலாநிதி விமலா பெக்லி தலைமையின் கீழ் நடைபெற்ற ஆய்வு மிகவும் முக்கியம் வாய்ந்தது.

மேலும் முக்கியமான தொல்லியற் தளங்களான பொம்பரிப்புப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளான கரம்பன் குளம், கொல்லன் கனத்தை, தேக்கம் போன்ற இடங்களும் முக்கியத்துவம் வாய்ந்த அக்காலக் குடியிருப்புக்களாகக் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூர் ஒரு முக்கிய ஆதி இரும்புக் காலக் குடியிருப்பாக 2005 இல் நடத்தப் பட்ட அகழ்வாய்வினால் மேலும் உறுதியாகியுள்ளது. அதற்கு அண்மித்த பகுதியாக இலங்கையின் வட மேற்கில் இருக்கின்ற பொம்பரிப் புப் பிரதேசத்தில் அதே பண்பாடு விரைவாகவும் செறிவாகவும் பரவியிருப்பதில் ஆய்வாளர்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படவில்லை.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில், கடந்த 30 ஆண்டுகளாகக் கூடுதலான ஆதி இரும்புக் காலத் தொல்லியற் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதி இரும்புக் காலத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்து விளங்கிய கந்தரோடையில் 1970 களில் அமெரிக்கப் பென்சில்வேனியப் பல் கலைக்கழகத்து அரும் பொருளகத்தினர் நடத்திய அகழ்வாய்வில் இரும்புக்காலப் பண்பாட்டு எச்சங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டதோடு, அவற்றுள் காணப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓட்டின் காலக்கணிப்பும் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவ் ஆய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கைகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. அதே போன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையினர் பேராசிரியர் இந்திரபாலா தலைமையின் கீழ் ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சியை 1980களில் நடத்தினர். அப்போது, சவ அடக்கமும், பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை ஒன்றும் கண்டு பிடிக்கப் பட்டன.

(தொடரும்)

# மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப்பணிகளை வீடியோ, புகைப்படம் எடுக்க நீதிமன்றம் தடை



(மன்னார்)

மன்னாரில் இடம் பெற்று வரும் மனித எலும்புக்கூடுகள் அகழ்வு பணிகளை புகைப் படம் எடுப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், தொலைக் காட்சி, அச்சு மற்றும் சமூக வலையமைப்புகளுக்கு மன்னார் நீதவான் நீதிமன்றத் தினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவு தொடர்பில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் B 232/2018 கொண்ட வழக்குடன் சம்பந்தப்பட்ட அகழ்வு மேற்கொள்ளும் பூமியில் உட்பிரவேசித்தல். புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒளிப்பதிவு செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் B 232/2018 கொண்ட வழக்குடன் சம்பந்தப்பட்ட கட்டட நிர்மாணப் பணிக்கு ஒதுக்கப்பட்ட "சதொச" பூமியில் மண் அகழ்வு செய்யும் போது மனித எச்சங்கள் சில காணப்பட்டதுடன் அது சம்பந்தமாக நிபுணர்களின் மதிப்பறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான அகழ்வுப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த அகழ்வு சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் புலனாய்வு நடவடிக்கை பூர்த்தி செய்யாததாலும், இந்த புலனாய்வில் உள்ள முக்கியத்துவம் கருதி இடையூறுகள் இல்லாமல் தொடர்ந்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அகழ்வு மேற்கொள்ளப்படும் பூமியில் சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், தொலைக்காட்சி, அச்சு மற்றும் சமூக வலையமைப்புக்கள் அகழ்வுப் பணிகளுக்கு பொறுப்பான அதிகாரியின் உரிய அனுமதி இன்றி எந்த ஒரு வெளி நபர்களுக்கும் குறித்த பூமிக்கு உட்பிரவேசித்தல், புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் மற்றும் அகழ்வு சம்பந்தமாக கலந்துரையாடலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

## வடக்கு மாகாணத்தில் விரைவில் கடற்றொழில் திணைக்களம் இயங்கும்

### வடக்கு மாகாண விவசாய அமைச்சர் உறுதி

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தில் விரைவில் கடற்றொழில் திணைக்களம் இயங்கவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மீன்பிடி அமைச்சின் கீழ் கடற்றொழில் திணைக்களம் இதுவரை உருவாக்கப்படவில்லை. அதற்கான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போராட்டம் மேற்கொண்டுவரும் கடற்றொழிலாளர்களை வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு மீனவர்களின் பிரச்சினைக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது வடக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லை என்ற குறையை மீனவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தெரியப்படுத்தினர்.

ஏனைய எல்லாத்திணைக்களத்திற்கும் ஆளணி உள்ளது. கடற்றொழில் திணைக்களத்திற்கு மட்டும் இதுவரை ஆளணி இல்லை. அதனை இப்போதுதான் நாங்கள் உருவாக்கி வருகின்றோம்.

அதற்கான நடவடிக்கை மூலம் நியதிச்சட்டம் இயற்றி அதனை மொழிபெயர்ப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கை மட்டுமல்ல வடக்கு மாகாணத்தில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தை உருவாக்கும் நடவடிக்கை நடைபெற்றுள்ளது.

என்னிடம் முதலமைச்சர் பொறுப்பை ஒப்படைத்த போதே நீங்கள் திணைக்களத் தினை உருவாக்குங்கள் என்று உடனடியாக இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பியுங்கள் என்று சொல்லி இருந்தார்.

இந்த திணைக்களம் உருவாக்கப்பட்டிருந்தால் மீனவர்களின் பிரச்சினை இவ்வளவு தூரம் வந்திருக்காது.

கடற்றொழிலாளர்கள்நீண்டகாலமாக அதிகாரிகளை நம்பிக்கொண்டு இருக்க முடியாமல் ஆழ்கடலுக்கும் செல்ல வேண்டும். அதற்கு பயிற்சியை பெறவேண்டும்.

ஆழ்கடல் படகினைகூட மானிய முறையில் உங்களுக்கு கொடுக்கமுடியும். அவ்வாறு கொடுத்தாலும் தெற்கில் உள்ளவர்களை நம்பித்தான் நீங்கள் தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு இல்லாமல் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் உயர்தரப் பரீட்சையில் ஒரு பாடம் சித்தியடைந்த கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல் பயிற்சியை எடுக்கவேண்டும். அதற்காக பயிற்சி கொடுப்பதற்கு பல நிறுவனங்கள்உதவித்தொகை கொடுத்து பயிற்றுவிக்க முன்வந்து இருக்கின்றார்கள்.

ஆழ்கடலில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கையை மேற்கொண்டால் வெளிமாவட்ட மீனவர்களின் வருகை குறைவடையும். இது மீனவர்களின் நீண்டகால செயற்பாடாக அமையும் என்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-315)

## மாடுகளைக் கடத்த முயன்றவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

(பரந்தன்)

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூன்று பசு மாடுகளைக்காணவில்லை என நேற்று முன்தினம் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தமைக்கு அமைவாக தேடுதல் நடவடிக்கையைமேற்கொண்ட பொலிஸார் மகேந்திரா ரக வாகனத்தில் கடத்தப்பட்ட மாடுகளை மீட்டதுடன் வாகனத்துடன் சந்தேக நபர்ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவத்துடன் மேலும் சிலர் தொடர்புபட்டிருப்பதாகவும் அவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் கைது செய்யப்பட்டவரையும் வாகனம் மற்றும் மாடுகளையும் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-312)

## தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சின் வவுனியாவிற்கான இணைப்பாளர் நியமனம்



(குருமன்காடு)

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தனது அமைச்சின் வவுனியா மாவட்டத்திற்கான இணைப்பாளராக குலேந்திரம் ஆனந்தராஜா நியமனம் செய்துள்ளார்.

தனது அமைச்சில் வைத்து இந்த நியமனக் கடிதம் அமைச்சர் மனோ கணேசனால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இந்த நியமனம் தொடர்பாக கு.ஆனந்தராஜாவை தொடர்பு கொண்டு வினவிய போது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு என்ற வகையில் மக்கள்சந்திப்புக்கள் மூலம் மக்கள் குறைகளை கேட்டறிந்து முன்னுரிமை அடிப்படையில் அவற்றை தீர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை துரிதகதியில் முன்னெடுக்குமாறு அமைச்சர் மனோ கணேசன் தனக்கு பணித்துள்ளார் என அவர் குறிப்பிட்டார். (2-250)

## இதய கண்காணிப்பு நிலையம் மன்னார் வைத்தியசாலையில் திறப்பு

### நோயாளர் காவு வண்டியும் கையளிப்பு





(மன்னார்)

ஐக்கிய இராச்சியத்திலுள்ள மன்னார் நலன்புரி ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆர்.ஆர். அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட "உடற்பயிற்சியுடன் கூடிய இதய கண்காணிப்பு நிலையம்" நேற்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இயக்குநர் வைத்திய கலாநிதி கில்றோய் பீரிஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த நிலையத்தை திறந்து வைத்தார்.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள மன்னார் நலன்புரி ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆர்.ஆர். அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் சுமார் 2.8 மில்லியன் ரூபாய் நிதியுதவியுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட உடற்பயிற்சியுடன் கூடிய இதய கண்காணிப்பு உபகரண தொகுதிகள் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த உடற்பயிற்சி நிலையத்தின் ஊடாக இதயம் சார்ந்த நோய்களை கண்டறிந்து கொள்ள முடியும்.

அதனைத்தொடர்ந்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் சகல வசதிகளையும் கொண்ட நோயாளர் காவு வண்டி ஒன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

குறித்த நோயாளர்காவு வண்டியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை இயக்குநர் கில்றோய் பீரிசிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கருணாநிதி எனும் சாமானியன் சாணக்கியன் ஆன வரலாறு!



உலகம் வியந்த விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் பற்றி ஒரு சுவாரசியமான தகவல் உண்டு. அவரது மூளையை ஆய்வு செய்த தாமஸ் ஹார்வி என்ற மருத்துவர் உலகில் வேறு எவருக்கும் இல்லாத அளவிலான தொடர்பு நரம்புகள் அவரது மூளையில் அடர்த்தியாக இருந்தன என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் கணிதம் மற்றும் இயற்பியலில் எவராலும் போட்டி போட முடியாதவர் என்பதால் ஐன்ஸ்டீனின் இடது மூளையின் செயற்பாடுகள் அதிவேகமானதாகவும் வித்தியாசமானதாகவும் இருந்ததாகவும் மூளை மடிப்புகள் அவருக்கு அதிகமாக இருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டன.

உலகம் பெற்றிருந்த மாபெரும் சிந்தனையாளனின் மூளைப்பகுதி அப்படி இருந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தலைசிறந்த சிந்தனையாளர்கள், இராஜதந்திரிகளின் மூளை இதுபோன்று ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுவது உண்டு. ரஷ்யப் புரட்சியாளர் லெனின், மேற்கு வங்கத்தின் மார்க்சியவாதி ஜோதிபாசு உள்ளிட்டோர் இதுபோன்றவர்களில் அடங்குவர்.

இவர்களின் வரிசையில் இப்போது தி.மு.க. தலைவர் கருணாநிதி எனலாம். "ஆளும் திறமை இடது மூளை... அவரின் காவியமும், கற்பனையும் வலது மூளை. பரவலாக மனிதனுக்கு இரண்டில் ஒன்றுதான் மேன்மையாக இருக்கும். இரண்டும் மேன்மையாகச் செயற்படுவது கலைஞருக்குத்தான்" என்று குறிப்பிட்டிருப்பார் அவரின் நெருங்கிய நண்பரான நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி.

1969ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராகவும், முதல்வராகவும் இருந்த சி.என். அண்ணாதுரை, புற்றுநோயால் மரணம் அடைந்ததை அடுத்து அக்கட்சியின் அடுத்த சட்டமன்றக் குழுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் உண்டானது. நாவலர் நெடுஞ்செழியனுக்கும், கருணாநிதிக்குமான பனிப்போர் காலம் அது. "போட்டிவழியே தலைவரைத் தேர்ந்தெடுப்போம்" என்கிற நிலைப்பாட்டை எடுத்தார் நெடுஞ்செழியன். கட்சியினர் இருவேறு தரப்பாகப் பிரிந்து இருவருக்கும் ஆதரவு அளித்தனர்.

கருணாநிதியை ஒரு தரப்பும், நெடுஞ்செழியனை மற்றொரு தரப்பும் முன்மொழிந்தார்கள். கருணாநிதிக்கு பெரும்பான்மை கிடைக்கும் சூழல் உருவான நிலையில் நெடுஞ்செழியன் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். இதனால் யாரைச் சட்டமன்றக் குழுத்தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்னும் சிக்கலான சூழல் உருவானது. அப்படிப்பட்ட சூழலில் தான் பெரியாரைச் சந்திக்கச் சென்றார் கருணாநிதி. ஆனால், அதற்கு முன்பே கருணாநிதியை சட்டமன்றக் குழுத்தலைவராகப் பரிந்துரைத்த அறிக்கை விடுதலை இதழில் பிரசுரிக்கப்பட்டது.

"சட்டமன்றக் குழுத்தலைவர் பதவி கருணாநிதிக்கு" என்று முடிவானதை அடுத்து நெடுஞ்செழியனுக்கு அமைச்சரவையில் இடம் ஒதுக்கப்பட்டது. "கட்சியில் மூத்த உறுப்பினர் என்கிற அடிப்படையில் நெடுஞ்செழியனுக்கு அமைச்சரவையில் இடமளிக்கவேண்டும்" என்று கருணாநிதிதான் முடிவெடுத்ததாகவும் கூறப்பட்டது.

ஆனால் கருணாநிதியுடனான கருத்து முரண்பாட்டால் அதனை மறுத்தார் நெடுஞ்செழியன். அந்த வருடம் அண்ணாதுரையின் நினைவுநாள் கூட்டம், கருணாநிதி தலைமையில் சென்னை தியாகராய நகரிலும், நெடுஞ்செழியன் தலைமையில் திருவல்லிக்கேணி தொகுதியிலும் என இருவேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. அண்ணாதுரை உருவாக்கிய கட்சியில் அதற்குள் பிளவு ஏற்பட்டுவிடக் கூடாது என்று சுதாரித்துக் கொண்டார் கருணாநிதி.

இருவருக்குமிடையே தொடர்ந்த கருத்து வேறுபாடுகளைக் களைய நெடுஞ்செழியனை கட்சியின் பொதுச் செயலாளராக இருக்க அழைப்பு விடுத்தார். அதையடுத்து, சென்னையில் இருந்த ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் ஐம்பது வருடங்களுக்கு முன்பு 1969ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று, தி.மு.கவின் பொதுச்செயலாளர் ஆனார் நெடுஞ்செழியன். கருத்து முரண்பாடு ஏற்பட்ட கருணாநிதியைக் கட்சியின் தலைவராக முன்மொழிந்தார் நெடுஞ்செழியன். இருவரும் அதே மேடையில் கட்டியணைத்துக் கொண்டனர். கட்சியின் ஒற்றுமைக்காக, கருணாநிதி எடுத்த முதல் நடவடிக்கை அது.



### கழகத்துக்கான தந்திரங்கள்...!

ஒரு நல்ல தலைமையின் கட்டுக்கோப்பில் இயங்கும் கட்சி, தலைமை இல்லாத காலங்களிலோ அல்லது தலைமையின் செயற்பாடுகள் குறைந்த காலங்களிலோ பெரும் இக்கட்டுகளைச் சந்திக்கும். தமிழகத்தின் நடப்பு ஆட்சி மற்றும் தற்போதைய அரசியல் சூழல் அதற்கான சிறந்த உதாரணம். திராவிட முன்னேற்றக் கழகம், அப்படியான உட்கட்சிப் பூசல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அண்ணாதுரை தலைமையில் திருச்சியில் கட்சியின் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால், உடல்நிலை நலிவுற்றிருந்ததால் தனக்குப் பதிலாக கருணாநிதியைத் திருச்சிக்கு அனுப்பி வைத்தார் அண்ணா. கூட்டம் நடத்தப்பட்டு, திருச்சியில் 132 இடங்களில் கட்சிக் கொடி ஏற்றப்பட்டது. கட்சியில் இருந்து ஒருவரும் வெளியேறிவிடக்கூடாது என்கிற அண்ணாவின் அதே எச்சரிக்கைப் போக்கு கருணாநிதியிடமும் இருந்தது. சிந்தனைகள் ஒரே அலைவரிசையில் இருந்தால் மட்டுமே இயக்கமாக வெற்றிகரமாகச் செயற்படுவது சாத்தியம் என்பதற்கு இந்தச் செயற்பாடு ஒரு சிறந்த உதாரணம். கட்சியின் முக்கிய பொறுப்புகளை உரிய நபர்களிடம் ஒப்படைப்பதில்கூட ராஜதந்திரியாகவே இருந்தார்கருணாநிதி. எம்.ஜி.ஆரைக் கட்சியின் பொருளாளராக நியமித்ததும் அந்த அடிப்படையில் தான். மக்களிடையே அடையாளம் பெற்ற ஒருவரைக் கட்சியில் உயர் பதவியில் அமரவைப்பது கட்சிக்கு வலுச்சேர்க்கும் என்பது அவரது எண்ணம்.

மன்னை நாராயணசாமிக்கும், கோ.சி. மணிக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டபோதும் கட்சியின் இணக்கத்திற்காக கருணாநிதி, அந்தப் பிரச்சினையைச் சிறந்த முறையில் கையாண்டார். தன் பயணங்களில் இருவரையும் ஒன்றாகக் காரில் ஏற்றிக்கொள்வார். இருவருக்கிடையேயும் முரண்பாடு, கோஷ்டிப் பூசல்கள் எனப் பல பிரச்சினைகள் இருந்தன. பிரச்சினைகள் இருந்தது என்பது கருணாநிதிக்கும் தெரியும்.

ஆனால், இருவரையும் சரிசமமாகவே நடத்துவார். அவர்களை அப்படி நடத்தினால் மட்டும்தான் தொண்டர்கள் தன் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு உண்மையாக நடந்ததாக இருக்கும் என்பது கருணாநிதியின் நிலைப்பாடு. கட்சியில் எங்கே, யாரை, எப்படி அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பது ஒரு நல்ல தலைமைக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

### கருணாநிதியின் ஆரோக்கிய அரசியல்...!


எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவில் ஜானகி மற்றும் ஜெயலலிதாவுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டபோது கருணாநிதியின் ஆதரவைக் கோரினார் ஜானகி.

ஆனால், கருணாநிதி மறுத்தார். குடும்பப் பிரச்சினைகளைக் கட்சிப் பிரச்சினை ஆக்குவதும், அதில் மூன்றாம் நபரின் ஆதரவைக் கோருவதும் தவறு என்பது அவருடைய நிலைப்பாடு. ஒரு வேளை ஜானகிக்கு ஆதரவளித்திருந்தால் ஜெயலலிதா எனும் சக்தி உருவாகியிருக்க முடியாது.

ஆனால், ஆரோக்கியமான அரசியலை விரும்பிய கருணாநிதி அதனைத் தவிர்த்தார். கொண்ட கொள்கையில் என்றும் தவறாது இருந்தது, அவரது ஆரோக்கிய அரசியல். மத்தியில் மதச்சார்பின்மையைக் கோரியவர், மாநிலத்தில் கூட்டணிக் கட்சிகளிடையே சமூக நீதிக்காகக் குரல்கொடுத்தார். அதற்கு உதாரணம், கடந்த 2016 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணியில் இருந்த மனிதநேய மக்கள் கட்சி, முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளுக்கு மட்டும் பத்து தொகுதிகளை ஒதுக்கிக் கொடுத்தார்.

### மத்திய ஆட்சிகளுடனான போக்கு...!

பொதுவாக ஒரு முக்கிய முடிவை எடுப்பதற்கு முன், மூத்த தலைவர்கள் பத்து பேரிடம் விவாதிப்பார் கருணாநிதி. அனைத்தையும் கேட்டுக் கொண்டு, பதினொன்றாவதாகப் புதிய யோசனை ஒன்றைச் சொல்வார். "எவன் ஒருவன், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை யூகித்து, அதற்கு ஏற்றாற்போல கழகத்தை வழிநடத்துபவனோ அவனே நல்ல தலைவன்" என்பார். கருணாநிதியின் கூட்டணி நிலைப்பாடுகளும் மத்திய ஆட்சி தொடர்பான அவரது சிந்தனைகளும் அதையொட்டியே இருந்தன. டில்லி மத்திய அரசிலும், அது தொடர்பான திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும்பாலான செய்திகளிலும் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மட்டுமே தெரிவார். "பி.ஜே.பியுடன் ஏன் கூட்டணி?" என்பது தொடர்பான விவாதத்தில் மட்டும் அவரே முன்வந்து விளக்கம் அளித்தார். "பொதுநலனை மீறிச் செயற்பட்டால் உங்கள் கட்சியை விட்டு வெளியேறி விடுவேன்" என்கிற பொது நோக்கம் கொண்ட அறிவிப்பை விடுத்த பிறகே, பி.ஜே.பி. கூட்டணியில் இணைந்தார் கருணாநிதி. மத்தியில் இருக்கும் கட்சியை எந்தவொரு மாநிலக் கட்சியும் தனது விரலசைவில் ஆட்டிவைத்ததாகச் சரித்திரம் இல்லை. "தற்போதைய பி.ஜே.பி. ஆட்சியில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இல்லை" என்று அண்மைக்காலமாகப் பரவலாகப் பேசப்பட்டு வந்தாலும், அதே சிறுபான்மையினருக்கு மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான ஆட்சி இருந்தபோது, எவ்வித பாதிப்பும் இல்லாமல் அவர்களுக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுத்ததற்கு கருணாநிதி பலவகைகளில் காரணமாக இருந்தார்.



**கேள்வி:-** "நீங்கள் எழுதுவதையும், சிந்திப்பதையும் நிறுத்திக் கொண்டால் என்னவாகும்?"

கருணாநிதியின் பதில்: "உயிரே போய்விடும்".

மத்திய அரசியலின் தவிர்க்கமுடியாத அங்கம் மாநில அரசுகளுக்கான ஆட்சியியல் முன்னோடி அறிவாலயத்தின் அறிவாயுதம் தற்போது சிந்திப்பதை நிறுத்திவிட்டது. அவர் சொன்னதுபோலவே நிரந்தர ஓய்வுக்குச் சென்றுவிட்டார். இந்த ஓய்வில் அமைதி நிலைக்கட்டும்!

ஜூனியர் விகடன்

# சிறுவர் அரங்கம்

## மழைக்கு ஒதுங்கிய ஆடு

காட்டில் மழை கொட்டிக் கொண்டிருந்தது. வழி தவறிய ஆடு ஒன்று மரத்தின் கீழ் ஒதுங்கி நின்றது. அதிகநேரம் மழையில் நனைந்ததால் குளிரில் நடுங்கியது.

அடிக்கடி தன்னையும் மீறி "மே... மே..." என்று கத்தியது. ஆடு கத்தும் சத்தம் கேட்டு பக்கத்து குகையில் இருந்த நரி எட்டிப் பார்த்தது. கொட்டும் மழையில் உற்றுப் பார்த்தது. சற்றுத் தூரத்தில் ஆடு இருப்பதைக் கண்டது.

'நல்ல பசி. ஆடு தனியாக இருக்கிறது. பிடித்தால் ஒரு வாரம் வரை உட்கார்ந்து சாப்பிடலாம்' என்று நினைக்கும் போதே நரிக்கு நாவில் நீர் ஊறியது. 'ஆட்டை எப்படிப் பிடிப்பது? உடல் நலமில்லை என்பதால் மழையில் வெளியே போகவும் முடியாது. அதற்காக ஆட்டை விடவும் மனமில்லை. ஆட்டின் மீது இரக்கம் காட்டுவதுபோல நடிக்கலாம். என் பேச்சில் மயங்கிக் குகைக்குள் வரும்போது பிடித்துவிடலாம்' என்று திட்டம் தீட்டி ஆட்டை அழைத்தது.

"நண்பா, இப்படி கொட்டும் மழையில் நனைந்து கொண்டிருந்தால் உடல் என்னாவது? உன்னை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. என் குகைக்கு வா. சற்றுக் கதகதப்பாக இருக்கும். மழை குறைந்த பிறகு நீ கிளம்பிவிடலாம்" என்றது நரி.

நரியைப் பார்த்த உடன் ஆட்டுக்குப் பயம் வந்துவிட்டது. 'ஐயோ..., இன்றோடு நான் காலியா?' என்று நினைத்தது ஆடு.

"நண்பா, நீ என்ன யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். என் குகைக்குள் வந்தால் உன்னைச் சாப்பிட்டு விடுவேன் என்ற பயம்தானே? ஆனால் இப்போது உனக்கு உதவி செய்யவே எண்ணுகிறேன். சற்று முன்புதான் ஒரு மானைச் சாப்பிட்டேன். பசி வேறு இல்லை. என்னை நம்பு" என்றது நரி.

மழை விடும் என்ற நம்பிக்கை இல்லை. இடி, மின்னல் அதிகமாக இருக்கிறது. நரியின் குகைக்குச் சென்று சிறிதுநேரம் நனையாமல் இருக்கலாம். அதற்கு முன் நரியிடமிருந்து தப்பிக்கும் வழியை யோசிக்க வேண்டும்.



"இடி, மின்னல் சீக்கிரம் ஓடிவா" ஆடு குகைக்குள் நுழைந்தது.

"நரியே. உமது பிறவிக் குணம் அறிந்தும் வந்திருக்கிறேன் என்றால் அது என் மீதுள்ள பயத்தினால் தான்!"

"என்னது... உன் மீது பயமா? என் மீது அல்லவா பயம் வந்திருக்க வேண்டும்!"

"நீ சொல்வது சரிதான். ஆனால் உன்னை நினைத்துப் பரிதாபப் படுகிறேன்"

"என்ன உளறுகிறாய்? என்னைப் பார்த்துப் பரிதாபப்படுகிறாயா? சற்று நேரத்தில் உனது கதையை முடிக்கப் போகிறேன். அதுவரை என்னை நீ கிண்டலடித்துக்கொள்" என்றது நரி.

"என் கதையைக் கேட்டுவிட்டு என்னைச் சாப்பிடு"

"சரி. எனக்கும் பொழுது போகவில்லை. சொல்" என்று அலுத்துக்கொண்டது நரி.

"போன வாரம் காட்டில் மேய்ந்து கொண்டிருந்தபோது அறியாமல் விஷச் செடியைத் தின்றுவிட்டேன். நான் விரைவில் இறந்து விடுவேன் என்று மருத்துவர் கூறி விட்டார். இன்றே என்னைச் சாப்பிட்டு என் துன்பத்திலிருந்து விடுவிக்கும் உன்னிடம் இதைச் சொல்லாமலிருக்க மனமில்லை. என் மூலம் உனக்கும் இந்த நோய் பரவிவிடும் என்பதை நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது. அதனால்தான் எங்கள் இருப்பிடத்தில் இருக்காமல், காட்டுக்குள் அலைந்து திரிகிறேன்" என்று வருத்தத்தோடு சொன்னது ஆடு.

நரிக்குப் பயம் வந்தது. சற்று நேரம் அமைதியாக இருந்தது.

"உன்னைச் செல்லமாக மிரட்டவே உண்ணப் போவதாகச் சொன்னேன். அதிகநேரம் நீ இங்கிருந்தால் நோய் என்னையும் தாக்கி விடலாம். மழை நின்று விட்டது. உடனே இங்கிருந்து கிளம்பு. உடல் நிலையைக் கவனித்துக் கொள்" என்று அக்கறையோடு சொன்னது நரி.

உயிர் தப்பி வந்த ஆடு. ஏமாந்த நரியை நினைத்து விழுந்து விழுந்து சிரித்தது.

## பொன்மொழிகள்

- ✦ நல்ல செயலுக்கு வட்டி கிடைக்கும் - மில்டன்
- ✦ விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காண முடிகிறது - தாகூர்
- ✦ கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம் - சிம்மன்ஸ்
- ✦ தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை, காலால் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பது போன்றது - எமர்சன்
- ✦ உண்மை ஊடுருவும் சூரியஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது - மில்டன்
- ✦ உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பயம் - ராஜாஜி
- ✦ உண்மையை நேசி, தவறை மன்னித்துவிடு - வால்டேர்
- ✦ தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன்தான் அறிவாளி - டாக்டர் ஜான்சன்
- ✦ தம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும் - கதே
- ✦ தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார் - பிராங்கிளின்
- ✦ மாணவர்களை மதிப்பதில்தான் கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது - எமர்சன்
- ✦ அறியாமையிலிருந்தே பயம் தோன்றுகிறது - எமர்சன்
- ✦ நம்பிக்கையின் திருடன்தான் மேடைப்பிரசங்கி - எமர்சன்

## சிந்தனைத் துளிகள்

- உன்னைவிட உனக்கு உதவ யாராலும் முடியாது.
- எல்லோரும் எல்லாம் தெரிந்து கொண்டு பிறப்பதில்லை. நமது அறிவைப் பயன்படுத்தி, நாம்தான் ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகளால் பகுத்தறிந்து சிந்தித்துச் செயற்பட்டு வெற்றிகளைக் குவிக்க வேண்டும்.
- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்!
- வெற்றிக்கும் தோல்விக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. கடமையை செய்தால் வெற்றி! கடமைக்குச் செய்தால் தோல்வி!
- நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை, யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில் அதை செய்து கொண்டுதான் இருக்கிறார்.
- ஒவ்வொரு மனிதனும் இந்த உலகத்தையே மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைப்பது இல்லை! - லியோ டால்ஸ்டாய்
- எது உன்னை அச்சம் கொள்ளச் செய்கிறதோ அதை அஞ்சாமல் எதிர்த்து நில் - சுவாமி விவேகானந்தர்
- வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு- தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு - வைரமுத்து
- வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்சிக் கல்வி பல தந்து - இந்தப் உலகை உயர்த்திட வேண்டும். -முண்டாசுக் கவிஞன்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 09

- ❖ 1902 - யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் றோமன் கத்தோலிக்க ஆலயம் ஒன்றும் பாடசாலை ஒன்றும் இந்துக்களால் தாக்கி அழிக்கப்பட்டன.
- ❖ 1942 - வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கியதற்காக மகாத்மா காந்தி உட்பட பல இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மும்பை யில் கைது செய்யப்பட்டனர்.
- ❖ 1991 - யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஜூலை 10 இல் ஆரம்பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது. இச்சமரில் 604 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். எனினும் 2000 ஆம் ஆண்டில் மீளத் தாக்குதல் மேற்கொண்டு தளத்தைக் கைப்பற்றினர்.
- ❖ 2006 - திருகோணமலைப்பகுதியில்தமிழ்மக்கள்வெருகல் ஊடாக இடம்பெயர்ந்தபோது விமானத் தாக்குதல்களாலும் எறிகணைத்தாக்குதலாலும் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- ❖ 1892 - சீர்காழி இரா.அரங்கநாதன், இந்தியக் கணிதவியலாளர், நூலகவியலாளர் (இ. 1972)
- ❖ 1897 - ஈ.கிருஷ்ண ஐயர், இந்திய வழக்கறிஞர், விடுதலைப் போராட்ட வீரர் . (இ. 1968)
- ❖ 1904 - சரளாதேவி, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், பெண்ணியலாளர் (இ. 1986)
- ❖ 1909 - வி.கே.கோகாக், இந்தியக் கல்வியாளர், எழுத்தாளர் (இ. 1992)
- ❖ 1921 - எஸ். ஏ. ரகீம் இலங்கை அரசியல்வாதி (இ. 1989)
- ❖ 1923 - அல்லாடி ராமகிருஷ்ணன், இந்திய இயற்பியலாளர் (இ. 2008)
- ❖ 1930 - கு.திருப்பதி, தமிழக அரசியல்வாதி (இ. 2015)
- ❖ 1933 - எம்.டி.வாசுதேவன் நாயர், மலையாள எழுத்தாளர்
- ❖ 1941 - க.ப.அறவாணன், தமிழக எழுத்தாளர்
- ❖ 1975 - மகேஷ் பாபு, இந்திய நடிகர்
- ❖ 1991 - ஹன்சிகா மோத்வானி, இந்திய நடிகை

### இறப்புகள்

- ❖ 1948 - எல்லப்பிரகத சுப்பாராவ், இந்திய அறிவியலாளர் (பி. 1895)
- ❖ 1989 - கே.குணரத்தினம், இலங்கைத் திரைப் படத் தயாரிப்பாளர், தொழிலதிபர் (பி. 1917)
- ❖ 2016 - பஞ்சு அருணாசலம், தமிழ்த் திரைப்பட இயக்குநர், பாடலாசிரியர், கவிஞர் (பி. 1941)
- ❖ 2016 - கலிகோ புல், இந்திய-அருணாச்சலப் பிரதேச அரசியல்வாதி (பி. 1969)

### சிறப்பு நாள்

- ❖ பன்னாட்டு உலக பழங்குடிகள் நாள் (ஐ.நா.)
- ❖ தேசிய பெண்கள் நாள் (தென்னாபிரிக்கா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 240 | 200 | 300 | 250 |
| தக்காளி | 100 | 100 | 80 | 90 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 150 | 140 | 90 | 160 | 160 |
| கரட் | 280 | 300 | 320 | 220 | 400 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 50 | 80 | 80 |
| புடோல் | 60 | 70 | 80 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 130 | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 70 | 120 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 50 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 80 | 120 | 140 |
| பீற்றூட் | 150 | 90 | 120 | 90 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 180 | 180 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 80 | 40 | 80 | 40-60 |
| போஞ்சி | 200 | 230 | 200 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 55 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 50 | 45 | 30-50 | 50 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 130 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 120 | 100 | 200 | 60 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 30 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 40 | 120 | 60 | 30 |

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது.

– ஜேம்ஸ் க்வார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கு மாகாண முதலமைச்சரை வெளியேற்றுவதுதான் ஒரே இலக்கு

தமிழினத்தை அழித்தவர்களும் அவர்களுக்கு முண்டுகொடுத்தவர்களும் இன்னும் உறங்கவும் ஓயவும் இல்லை.

தமிழினம் தலைநிமிரக்கூடாது என்பதில் இவர்கள் கடும்பிடியாக நிற்கின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தம் இனத்தாலும் சிங்கள இனத்தாலும் சர்வதேசத்தாலும் ஏமாற்றப்பட்டவர்களாகிவிட்டனர்.

உயிரிழப்பைத் தவிர வேறு எதுவுமில்லை என்ற நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தங்களின் கடமைப் பொறுப்புக்களை மறந்து விட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எங்ஙனம் தங்கள் கைக்குள் வைத்திருப்பதென்பதை நல்லாட்சி நன்றாக அறிந்து அதற்கேற்றாற்போல் செய்ய,

வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பது முதல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளுந்தரப்பின் ஓர் அங்கமாகவே தன்னைக் காட்டிக் கொள்கிறது.

இதுதவிர, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கூட தனது கட்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகிவிட்டார்.

ஆக, கூட்டமைப்பின் இயங்குநிலை என்பது சம்பந்தரின் கையை விட்டு விலகிப் பல தூரம் சென்றுவிட்டது.

இப்போது கூட்டமைப்புச் செய்வதெல்லாம் இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. சபையிலும் சர்வதேச சமூகத்திலும் இருந்து காப்பாற்றுவதுதான்.

இதன்காரணமாகவே ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு இரண்டு வருட கால அவகாசம் கொடுக்க வேண்டும் என நம்மவர்கள் கூறுமளவுக்கு நிலைமையுள்ளது.

இதெல்லாம் மக்கள் எங்கு உணரப் போகிறார்கள் என்ற நினைப்பில் வல்லவன் பம்பரம் மணலிலும் சுற்றுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போதிருக்கின்ற சூழ்நிலையில் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அரசின் போக்கையும் வெளிப்படையாகக் கூறிவருகிறார்.

சமஷ்டி என்பதுதான் இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு. காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் தமிழர்களுக்குத் தந்தாக வேண்டும் என்பவற்றைக் கூறும்போது,

ஓகோ! எல்லோரையும் அடக்கினோம். இப்போது நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கூறி இலங்கை மீதான சர்வதேசத்தின் கவனத்தை மீண்டும் ஏற்படுத்தி விடுவாரோ என்று உணர்ந்தவர்கள்,

உள்ளிருந்து வேரறுக்க வல்லவர்களைத் தூண்டிவிட, அவர்கள் முதலமைச்சருக்கு எந்த வகையிலும் தொந்தரவு கொடுத்து அவரை கொழும்புக்கு அனுப்பிவிட வேண்டும் என்பதில் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

இந்த உபாதைகளை முறியடித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க, தமிழ் மக்கள் அவரின் பாதுகாப்புக் கேடயங்களாக இருக்க வேண்டும்.

# அரசின் நல்ல திட்டங்களை தடுப்பவர்கள் எதிர்க்கட்சியினராக செயற்பட முடியாது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

பாராளுமன்றத்திற்குள் நெருக்கடிகளும், குழப்பங்களும் விளைவித்துக் கொண்டு அரசாங்கத்தின் நல்ல திட்டங்களின் பயன்கள் மக்களை சென்றடையாதவாறு தடுத்துக் கொண்டிருப்பவர்கள் எதிர்க்கட்சியினராக செயற்பட முடியாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் 70 பேர் காணப்படுகின்றமையால் அவர்களால் எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோரமுடியாது.

பொது எதிரணியில் அங்கம் வகிப்பவர்கள் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களாகவே பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவானவர்கள் .

அரசாங்கத்தில் இருந்து விலகினாலும் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து விலகியதாக அறிவிக்கவில்லை. இதனால் இவர்களுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியாது.

2015ஆம் ஆண்டு பொது தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அதிகபடியான ஆசனங்கள் கிடைக்கப் பெற்றது. இதன் காரணமாகவே எதிர்க்கட்சி தலைவராக சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

இவர்கள் இன்று பாராளுமன்றத்தில் சிறந்த எதிர்க் கட்சியினராகவே செயற்படுகின்றனர். பல நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

இவ்வாறு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் என்ற காரணத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது பங்காளிகள் அல்ல. அவர்கள் சிறந்த எதிர்கட்சியினரே.

இப்பதவியை போராட்டங்களின் ஊடாக பொது எதிரணியினர் ஒருபோதும் பெற முடியாது. பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் சபாநாயகரது தீர்மானத்திற்கு அரசாங்கத்தின் உறுபபினர்கள் என்ற வகையில் நாங்கள் கட்டுப்படுவோம் என்றார். (ம)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக 20 ஆயிரம் பட்டதாரிகளை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல்

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை 2018 ஆம் ஆண்டுக்குள் முன்னெடுக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைசசுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி முதல் மே மாதம் 5ஆம் திகதி வரை 25 மாவட்டங்களை உள்ளடக்கும்வகையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

அதில் சுமார் 57 ஆயிரம பட்டதாரிகள் சமுகமளித்தனர்.

கோரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் 20 ஆயிரம் பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைத்துக் கொள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

எனினும் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளித்திட்டத்தில் குறைபாடுகள் உள்ளதனால் வடக்கு மாகாண மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் பட்டதாரிகள் நியமனம் அமைச்சரவையால் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை 2018ஆம் ஆண்டுக்குள் முன்னெடுக்க தேசிய கொளகைகள் மற்றும் பொருளாதார அமைச்சுக்கு அமைசசரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ம)

# சம்பா அரிசி, கோழியிறைச்சி, முட்டைக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசு அவதானம்

சந்தையில் சம்பா அரிசியின் விலை தொடர்ச்சியாக அதிகரிப்பதால் எதிர்வரும் நாடகளில் சம்பா அரிசிக்காக கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு குழு கூட்டத்தில இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கோழியிறைச்சி மற்றும் முட்டை விலை எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி அதிகரித்துச் செல்வதால் எதிர்வரும் இரண்டு வாரங்களில் கோழியிறைச்சி மற்றும் முட்டை விலை குறைவடையாவிட்டால் அவற்றுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வாழ்க்கைச் செலவு குழு தீர்மானித்துள்ளது. (ம)

# மாதாந்த திரையிடல்-16

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த திரையிடல்-16 எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கேட்போர் கூடத்தில் திரையிடப்படும்.

சுரண்டலுக்குள்ளாகும் ஏழை மீனவர் வாழ்வையும் சுரண்டலின் மீதான எதிர்ப்புக் குரல்களையும் சித்திரிக்கும் இத்திரைப்படம் 1948 இல் வெனிஸ் உலகத் திரைப்பட விழாவில் தங்கச் சிங்கம் விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆடி அமாவாசை விரதம்

ஆடி அமாவாசை விரதம் நாளை மறுதினம் சனிக்கிழமை 9 மணிமுதல் சண்டிலிப்பாய் ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.

இதில் சிவன் அம்பாள் அபிஷேக ஆராதனை, எள்ளும் தண்ணீரும் இறைத்தல் முதலான ஆத்மசாந்தி வழிபாடுகள், மோட்ச தீபம் ஏற்றுதல் சிவவில்வார்ச்சனை என்பன நடைபெறும்.

இங்கு அடியார்கள் சிவன் அம்பாளைத் தரிசித்து திருவருள் பெறுமாறு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி உபதேச திருக்கோவில் குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா. வாசுதேவக் குருக்கள் அறிவித்துள்ளார். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ராசிக்கேற்ற திருத்தலங்கள் எவை?**

மேடம்- இராமேஸ்வரம்
இடபம்-திருப்பதி
மிதுனம்-பழனி
கடகம்- இராமேஸ்வரம்
சிம்மம்- ஸ்ரீவாஞ்சியம்
கன்னி-திருக்கழுக்குன்றம்
துலாம்- திருத்தணி
விருச்சிகம்- காஞ்சிபுரம்
தனுசு- மயிலாடுதுறை
மகரம்- சிதம்பரம்
கும்பம்-தேவிப்பட்டினம்
மீனம்-வைத்தீஸ்வரன்கோயில

(தொடரும்)

# சத்திய தரிசனம்



## குழந்தைகளைத் தடுக்காதீர்!

❖ தொண்டு செய்பவர்கள் அனைவரிடமும் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். தொண்டுக்காக வந்திருப்பதால் நாம் பிறரைவிடச் சிறந்தவர்கள் என்றும், பக்தி மிகுந்தவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்க கூடாது.

❖ அர்ஜுனன் கிருஷ்ணனிடம் சரணடைந்தது போல், சரணாகதி மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால், அந்த இறைவனால் கூட உங்களை ஒன்றும் செய்ய இயலாது.

❖ சேவைக்கு அர்ப்பணித்துக் கொண்ட சேவகர்களாகிய உங்களை, சேவை பெறுகிறவர்கள் போற்றவும் செய்யலாம். தூற்றவும் செய்யலாம். உங்களுடைய கடமையை மகிழ்ச்சியாக செய்ய வேண்டும்.

❖ சுய விருப்பத் தொண்டு என்பது அள்ளித்தெளிக்கும் அவசரச் செயல் அல்ல. தீவிர ஒழுக்க நெறி, நீண்டகாலப் பயிற்சி, பணிவு இவையில்லாமல் தொண்டினை நன்றாகச் செய்ய இயலாது.

❖ குழந்தைகள் குறும்புத்தனமாக பேசுவார்கள். ஏதாவது படம் வரைந்து கிறுக்கித்தள்ளுவார்கள், இதை நாம் தடுக்கக்கூடாது. காரணம், அவர்கள் தங்களை மேதைகள் போல மனதில் கருதி செய்பவை இவை.

# யாழ். கிரிக்கெட் லீக்-2018

## யூனியன்ஸ் அணி வெற்றி




AB விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.கிரிக்கெட் லீக் தொடருக்கான 2ஆவது போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது யூனியன்ஸ் அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 55 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜான்சன்-11, தயாளன்-13, பிரசாந்-19, லவராஜ்-31, ஆகீஸன்-57, மகிதரன்-12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சண்சயன்-05,சிந்துஜன், தரணிதரன், ஆவிகன் தலா-01 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 15.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மிதுசன்-25, சதீஸ்-18, துவாரகன்-29, அஜன்தன்-14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தரீஸன்-01, சுஜன்தன்-02, பகீரதன்-02, தயாளன்-05 இலக்கினைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆண்டுகளாக நடத்திவரும்யாழ்நகரில்சிறந்த கழக அணித் தெரிவிற்கு (Rating) யூனியன்ஸ் அணி 5.25 புள்ளிகளையும், ஸ்கந்தாஸ்ரார் அணி 2.05 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.(க)

## மூளாய் விக்டோறி அணி வெற்றி


(யாழ்ப்பாணம்)

யாழ்.கிரிக்கெட் லீக் தொடருக்கான மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் (இருபது-20) கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

AB விளையாட்டுக் கழகம் நடத்தும் இத் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 04.08.2018 அன்று நடைபெற்ற முதல் போட்டியில் மூளாய் விக்டோறி அணி விங்ஸ் அணியை 22 ஓட்டங்களால் வெற்றி பெற்று தங்கள் முதல் வெற்றியை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கணேஸ்-23, பிரசாத்-12, பிரியங்கன்-20, டானியல்-24, சுஜிதரன்-10 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் வின்சன், மைக்கல், ஜவர்சன் தலா-01 இலக்கினையும், எட்வின், ஸ்ரீபன் தலா-03 இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 20 ஓவர்களில் 08 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெரி ஜோன்சன் 30, ஸ்ரீபன்-14, விதுஸன்-26 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஜங்கரன், பிரதீஸ், கிரிசாந் தலா 02 இலக்கினையும் பிரியாங்கன், கதியோன் தலா 01 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (Rating) மூளாய் விக்டோறி அணி 4.50 புள்ளிகளையும் விங்ஸ் அணி 2.06 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)




## ஆவரங்கால் இந்து இளைஞரை வென்றது மத்திய விளையாட்டுக் கழகம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.முதல் மூன்று செற்களையும் முறையே 26:24, 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றது.




ஆவரங்கால்மத்திய விளையாட்டுக் கழக அணி. பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் இ.ஆனோல்ட், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், வே.சிவயோகன், யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன், வளர்மதி சனசமூக நிலையத்தின் போசகர் ஆ.தங்கராசா, வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.(க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இருபாலை விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் 8 வீரர்கள் பங்குப்ற்றும் 6 பந்துபரிமாற்றம் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்று போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுகிழமை 8.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

வரையறுக்கப்பட்ட கழகங்கள் உள்வாங்கப்பட உள்ள நிலையில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உடன் 077 774 3396, 077 080 2407 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

• • • • • • • • • • • • • • • • • • •

இளந்தாரகை விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் அமரர் தேவதாஸ் பிரேமகுமாரியின் இரண்டாம் ஆண்டு நினைவாக நடத்தும் அணிக்கு பதினொருபேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்களையும் வீரர்களையும் உள்ளடக்கிய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் 076 666 3031 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

## மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் மாபெரும் கரப்பந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின்63ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய மைதானத்தில் மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான பிரிவு Bஇற்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் முதலாவதாக ஆரம்பமாகிய போட்டியில் நவஜீவன் விளையாட்டுக் கழக B2 அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி களமிறங்கி யது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 25-22 , 26-24 என்ற நேர் செற் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக்குள் உள்நுழைந்தது.

இரண்டாவது போட்டியில் இதில் சிவகுமரன் விளையாட்டுக்கழக அணி 25-19, 25-22 என்ற நேர் செற்கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக்குள் உள்நுழைந்தது.

மூன்றாவது போட்டியில் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக B1 அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் சென்றல் ஸ்ரார் விளை யாட்டுக்கழக B1 அணி 25-20, 25-20 என்ற நேர் செற் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக்குள் உள்நுழைந்தது. (க)



## யாழ். மத்திக்கு தேசிய ரீதியில் தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியலான கராத்தே தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் எஸ். ஜெனார்த்தனன் தங்கப் பதக் கம் வென்றார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து பங்குபற்றிய எஸ். ஜெனார்த்தனன் 21 வயதுப் பிரிவுக்கு மேற்பட்ட-வர்களுக கான 67 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## சக நண்பர்களை...

குறித்த இருவரும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் கொடிகாமம் பொலிஸாரினால் தேடப்பட்டு வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இருவரும் யாழ்.சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது சக நண்பர்களை பார்க்கச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளது. கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறைச்சாலைக்குள் புலனாய்வுத் அதிகாரிகள் சென்றுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் அவர்கள் இருவர் தப்பிக்க முயன்ற போது துரத்திச் சென்று தென்மராட்சி நாவற்குழிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். (ம-60)

## யுத்தத்தால் வெளியேறி...

கேள்வி நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கும் போது பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் நாட்டில் இருந்து வெளியேறிய அனைவரும் நாடு திரும்ப வேண்டும்.

அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தமிழகத்தில் ஏதிலிகளாக உள்ள இலங்கையர்கள் நாடு திரும்பும் போது, அவர்களது உடமைகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக இந்திய அரசாங்கம் கடல்வழி போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ள இணக்கம் வெளியிட்டுள்ளது.

தமிழக முகாம்களில் வாழும் ஈழ ஏதிலிகளில் 3 ஆயிரத்து 815 பேர் நாடு திரும்ப விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் ஏதிலிகளுக்கான முகவரகத்தின் அனுசரணையின் கீழ் இதுவரை 9 ஆயிரத்து 509 ஈழ ஏதிலிகள் நாடு திரும்பியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர், தமிழகத்தில் இருந்து நாடு திரும்புகின்றவர்களின் உடமைகளை கொண்டு வருவதற்கான கடல்வழி போக்குவரத்துக்கான நிதியை அவுஸ்திரேலியாவின் ஊடாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு வழங்கவிருந்தது.

எனினும் இந்தியா கடல்வழி போக்குவரத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், அவுஸ்திரேலியா வழங்கத் தயாராக உள்ள நிதியை, நாடு திரும்புகின்ற ஏதிலிகளின் மறுவாழ்வுக்குப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கையை வெளிவிவகார அமைச்சின் ஊடாக அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடு திரும்புகின்றவர்களுக்கான வாழ்வாதார கொடுப்பனவுகள், வீடு மற்றும் உடமைகளுக்கான மாதாந்த கொடுப்பனவு என்பன மீள்குடியேற்றத்துறை அமைச்சின் ஊடாக வழங்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் தமிழ்நாட்டில் பிறக்கின்ற இலங்கை ஏதிலிகளின் குழந்தைகளுக்கு, அங்குள்ள துணைத்தூதரகத்தின் ஊடாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தூதரகத்துடனான பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி வளம் இல்லாத ஈழ ஏதிலிகளின் நலன் கருதி, விசேட வர்த்தமானியின் ஊடாக குறித்த தூதரக கட்டணம் இல்லாது செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தமது பதிலில் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தியாவில் இருந்து நாடு திரும்பு விரும்புகின்ற ஏதிலிகள் விடயத்தில் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சின் தலைமையில், மீள்குடியேற்றத்துறை அமைச்சு, கடற்படை, காவற்துறை, பதிவாளர் திணைக்களம் மற்றும் குடிவரவுத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கிய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை, வடக்கில் அரசாங்கம் திட்டமிட்டுள்ள 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்துக்கு மேலதிமாக, இன்னும் 25 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடி இறுதி தீர்மானம் ஒன்று வழங்கவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

## அரசு தொடர்பில்...

நாயக்க தேரர்களை சந்தித்து அவர்களின் ஆசிகளை பெற்ற அமைச்சர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், நான் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு தேசிய விளையாட்டு வீரர்களை நியமிக்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை தயாரித்தேன். ஆனால் அது அமைச்சரவையினால் நிராகரிக்கப்பட்டது.

எனினும் எனது கடமையை நான் சரியாக செய்தேன். நான் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தமைக்கு காரணம் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தேசிய விளையாட்டு வீரர்களுக்கு அரச வேலைவாய்ப்பை வழங்கும் நோக்குடன் தயாரித்த அமைச்சரவைப் பத்திரத்தை போன்றதேயாகும் என அவர் மேலும தெரிவித்துள்ளார். (ம)

## 20ஆவது திருத்தச் சட்டம்...

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியினர் கடந்த காலங்களில் அரசாங்கத்தை கைப்பற்றுவோம் எனக் கூறிக்கொண்டிருந்தார்கள். இதுமுடியாது போனவுடன் தற்போது எதிர்க்கட்சியை குறிவைத்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதற்காகவே, எதிர்க்கட்சித் தலைவரை வெளியேற்ற வேண்டும் என போராடி வருகிறார்கள். உண்மையில், ஒருங்கிணைந்த எதிரணி என்ற ஒன்று நாட்டில் இல்லை. அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பு வேண்டும் என்றால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறிய பின்னரே இந்தக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு அவர்கள் ஒருபோதும செய்ய மாட்டார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறினால் அவர்களது நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாது போய்விடும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இறுதியாக இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அவர்கள் எந்த கட்சியில் போட்டியிட்டார்களோ, அதனை கருத்தில் கொண்டே இந்த விடயம் தீர்மானிக்கப்படும்.

2015, நூறு நாள் வேலைத்திட்டத்தின் போது நிமால் சிறிபால டீ சில்வாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்தமைக்கும் இதற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அப்போது, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிரணியில் இருப்பதாக அறிவித்தனர்.

சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர், நிமால் சிறிபால டி சில்வா எனும் வகையிலேயே அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது.

அதேநேரம், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பதால் தினேஸ் குணவர்த்தனவுக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படவில்லை. மாறாக, அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே பிரதிநிதியாக இருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரே தமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டாம் எனக் கூறும் போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தத் தரப்பினருக்கு நாம் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியும்.

செங்கோலை தூக்குவதும், சபையை குழப்பத்தை ஏற்படுத்துவதும், அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பினை தெரிவிப்பது மட்டும் எதிக்கட்சியின் வேலையல்ல. அந்தவகையில், தற்போதுள்ள பிரதான எதிர்க்கட்சியினர் மிகவும் சிறப்பாகவே செயற்படுகிறார்கள்.

இலங்கை வரலாற்றிலேயே அமிர்தலிங்கத்துக்குப் பிறகு சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள், தனி இராச்சியத்தைக் கோராமல் அரசாங்கத்தின் சில செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்கிக்கொண்டு, நன்றாகத் தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யவே 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தயாரித்து வருகிறோம். இதுவே, இவர்களினதும் நிலைப்பாடாக இருக்கிறது என தெரிவித்துள்ளார். (ம)

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த வடமராட்சி கிழக்கு குடத்தனையில் அதிரடிப்படையின் காவலரண்

(கரணவாய்)

குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக வடமராட்சி கிழக்கு குடத்தனையில் விசேட அதிரடிப்படையினரின் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பில் பொலிஸார் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பொலிஸாரின் உடந்தையுடன் தொடர்ச்சியாக மணல் கடத்தப்படுவதாக பொலிஸ் தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து குடத்தனை ஆறாம் கட்டை சந்தியில் விசேட அதிரடிப்படையினர் காவலரணை அமைத்துள்ளனர்.

அப்பகுதியில் பொலிஸ் சாவடி ஏற்கெனவே இருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விசேட அதிரடிப்படையினரின் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் மணற்காட்டின் சவுக்கங்காட்டுப் பகுதியில் மூன்று வருடங்களிற்கு முன்னர் விசேட அதிரடிப் படையினரின் காவலரண் இருந்த போதிலும் பின்னர் அது அகற்றப்பட்டு அங்கிருந்த விசேட அதிரடிப்படையினர் யாழில் உள்ள முகாமிற்கு மீளப் பெறப்பட்டிருந்தனர்.

தற்போது மீண்டும் விசேட அதிரடிப் படையினரின் காவலரண் அமைக்கப்பட்டதன் மூலம் அவர்கள் சுற்று ரோந்தில் ஈடுபடுவதனால் குற்றச்செயல்கள் குறையலாம் என நம்பப்படுகிறது. (ம-60)

## சம்பள பிரச்சினை ரயில் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

ரயில் தொழிற்சங்கங்கள் சில இணைந்து, நேற்று புதன்கிழமை பிற்பகல் முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

சம்பள பிரச்சினை உட்பட சில கோரிக்கைகளை முன்னிறுத்தி, குறித்த பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணி புறக்கணிப்பு நடவடிக்கையில், ரயில் நிலைய பொறுப்பதிகாரி, சாரதி, காவலர், கட்டுப்பாட்டாளர்கள் ஆகிய தொழிற்சங்கங்கள் இணைந்துள்ளதாக, ரயில் எஞ்சின் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடாங்கொட தெரிவித்துள்ளார். (ம)

# மர்மப் பொருள் வெடித்ததில் மாணவன் ஒருவரின் இடதுகை மணிக்கட்டுடன் துண்டிப்பு

(முல்லைத்தீவு)

முகமாலை தெற்கு கோவானம் காட்டுப் பதிக்குள் வேலி அடைப்பதற்காக கட்டை தறிக்க சென்ற மாணவன் ஒருவன் மர்மப் பொருள் வெடித்ததில் கையின் பகுதியை இழந்தார்

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு முகமாலை தெற்கு கோவானம் காட்டுப்பதிக்குள் வேலி அடைப்பதற்காக கட்டை தறிக்க சென்ற மாணவன் ஒருவன் மர்மப்பொருள் வெடித்ததில் கையை இழந்த நிலையில் பளை வைத்தியசாயசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இவரது இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் எழுதுமட்டுவாளை சேர்ந்த ஜெயபாலன் நிதர்சன் (18 வயது) என்ற மாணவனே படுகாயம் அடைந்து கையை இழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## இலட்சக்கணக்கான...

தில் பெரும் எண்ணிக்கையில் கூட்டம் குவிந்ததால் பெரும் குழப்பமும் நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, கூட்ட நெரிசலில் இருவர் இறந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் பலர் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

தன நிதானய
திகதி 2018-08-08
சீட்டிழுப்பு இலக்கம் 33
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 04 38 40 50

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 863
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 6 4 4 6 4 7

கொவிசெத
திகதி 2018.08.08
சீட்டிழுப்பு இலக்கம் 1845
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 22 42 80

மெகா பவர்
திகதி 08/08/2018
சீட்டிழுப்பு இலக்கம் 263
வெற்றி எழுத்து P
சுப்பர் இலக்க 10
வெற்றி இலக்கங்கள் 02 25 70 76

தேசிய லொத்தர் சபை

## இளைஞர்களு...

ர்கள் பத்து பத்து பேர் வீதம் உள்ளடக்கி அவர்களோடு மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இணைத்து குழுக்கள் அமைக்கப்படும். அந்தக் குழுக்கள் இரவு நேர ரோந்து நடவடிக்கையை முன்னெடுக்கும். உடனடியாக அந்தக் குழுக்கள் அமைக்கப்படும் என்று யாழ்.பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

அராலி பகுதியில் கடந்த சில வாரங்களாக அந்தப் பகுதி மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக குள்ள மனிதர்கள் போன்று இருப்பதாகவும், பாயும் சப்பாத்துக்களை அணிந்தவாறும், முகம் மற்றும் உடல் முழுவதையும் கறுப்பு உடையினால் மறைத்தவாறு வரும் சிலரே இவ் அச்சுறுத்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதாக அப் பகுதி மக்கள் பலரும் தெரிவித்தனர்.

இவ்வாறு வருவோர் வீட்டின் கூரைகள் மீது கல்லெறிந்து தாக்குவதாகவும் வீட்டில் இருப்பவர்களது கண்களில் தென்படும் வகையில் பதுங்கி இருந்து விட்டு பின்னர் பாய்ந்து செல்வதாகவும் அப் பிரதேசவாசிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் பொலிஸ். இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் அப்பிரதேச மக்கள் ஆகியோருக்கிடையில் ஆலோசனை கூட்டமொன்று அராலி அம்மன் கோவிலடியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தனர்.

மேற்படி சம்பவத்தினால் தினமும் இரவுப் பொழுதை அச்சத்துடனேயே கழிப்பதாகவும், இளைஞர்கள் ஊர்களில் அதிகாலை மூன்று மணிவரை காவல் செய்வதாகவும், இதனால் அவர்களால் மறு நாள் ஒழுங்காக தொழிலுக்கு செல்லவோ அல்லது மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்குச் செல்லவோ முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்குமாறும் அப் பகுதியில் பொலிஸாரது ரோந்து நடவடிக்கைகளை அதிகப்படுத்துமாறும் மக்கள் சார்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ம-9)


# வேலைவாய்ப்பு

O/L, A/L பயின்ற முன்னனுபவமற்ற இளைஞர், யுவதிகளுக்கு Granton International Pvt Ltd கம்பனியில் முகாமைத்துவம் சார்ந்த 40 பதவி வெற்றிடங்கள்.

- மேற்பார்வையாளர்
- நிர்வாக அதிகாரி
- கணக்காளர்
- அலுவலக உதவியாளர்
- உதவி முகாமையாளர்
- செயல்திட்ட அதிகாரி

- உணவு, தங்குமிட வசதி மற்றும் இலவச மருத்துவ சேவை.
- பயிற்சிக்காலத்தில் 18,500/= - 25,000/= வரையிலும் பயிற்சியின் பின்னர் 45,000/= முதல் அவர்களின் பதவிக்கு ஏற்றவாறு வழங்கப்படும்.

முன் அனுமதி இலவசம். மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(6294)

மேலதிக தொடர்புகளுக்கு:

076 770 7759, 077 999 4807


## 40 ரூபாயால்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த விலை மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் மதுபான உற்பத்தி நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (ம)

பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈரானின் மீதான பொருளாதார தடையை அமெரிக்கா மேலும் விரிவு டுத்தியுள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலைகளும் அதிகரிக்க கூடிய அபாயம் உள்ளது. ஈரானில் இருந்தே அதிகளவில் எரிபொருள்களை கொண்டு வருகின்றோம். ஆகவே. இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி துரித ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பிலும் அரசாங்கம் என்ற வகையில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

அதேபோன்று சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலைமையின் தாக்கத்தினாலும் இலங்கைக்கு அதிகளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே இவை அனைத்தையும் அனுசரித்து நாம் செல்லவேண்டும்.

அத்துடன் ஆயிரம் என்ஜின் இயலளவுக்கு குறைந்த கார்கள் மீது விதிக்கப்பட்ட வரி தொகையில் திருத்தம் செய்வது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார். (ம)

## தொண்டையில்...

2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 61 வயதுடைய முதியவரே உயிரிழந்தார். முதியவரின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம)

## ஒரு வாரத்தில்...

விரைந்த கோப்பாய் பொலிஸார் திருட்டு சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளை வீட்டிலிருந்த அலுவலக ரப்வகை கணனியும் திருடப்பட்டது தெரியவந்துள்ளது.

அத்தோடு குறித்த வீதியில் அமைந்துள்ள மூன்று பேரின் வீட்டின் மீது ஒருவாரத்தில் தொடர்ச்சியாக மூன்று முறை திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருட்டு சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-101)


### துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

(C-3390)

3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)

Hotline -0777554528



### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-3396)



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து-700 /=Kg

0768226240

V2 TRAVELS

- மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


## எரிபொ...

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமர் மீதான கேள்வி நேரத்தின் போது கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்


O/L உடன் 6 மாதத்தில்

வீட்டுக்கு எந்தச் செலவும் இல்லாமல் விரும்பிய நாடு செல்லும் ஏற்பாட்டுடன்

### ஹொட்டேல் பயிற்சி



11ம் அணி ஆரம்பம்! இன்னும் 3 பேருக்கு மட்டுமே அனுமதி

டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில்

வேலைவாய்ப்புடன் விசா

26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா ஏற்பாட்டுடன் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கனடா விசா

வேலைவாய்ப்பு விசாக்கள், ஏற்கனவே விசா வென்றவர்களின் விபரங்களை நேரில் பார்வையிட்டு விண்ணப்பம் செய்யலாம்!

10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY Business - Hospitality - Media

FAST TRACK to CAREERS

www.sikaram.lk

0777 324 004

021 221 9 221

SIKARAM ACADEMY

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்



### விசேட வகுப்புக்கள்

சுங்கதிணைக்கள பதவி தெரிவுகளுக்கு

பரீட்சகர்

A/L மூன்று பாட சித்தியுடன் விண்ணப்பிக்கலாம்

உதவி அத்தியட்சகர்

பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

வகுப்புக்கள் பிரதி ஞாயிறு பி.ப 12.30-4மணி

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்

பிரதி ஞாயிறு 11.00 - 2.00 மணி

முகாமைத்துவ உதவியாளர் தரம் III EB

பிரதி ஞாயிறு 9.00 - 1.00 மணி

தொடர்புகளுக்கு:

0766883394

D.M.I

வெலிங்ரன் சந்தி


## வடக்கு வீட்டுத்...

திட்டம் முன்னெடுப்பது குறித்து அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பது குறித்து உரிய நிறுவனங்களுடன் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

அதேபோல் மேலதிகமாக 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் வேலைதிட்டங்களையும் கையாண்டு வருகின்றோம். விரைவில் சகல மக்களுக்கும் வீடுகள் வழங்கப்படும். அடிப்படை பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் தீர்ப்போம்.

இந்த நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகளை பெற்றுத் தருவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)


# பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி (6 மாதங்கள்)



## DIPLOMA IN ENGLISH COURSE WITH PERSONALITY DEVELOPMENT SKILLS

சரளமாக ஆங்கில மொழியை பேச முழுமையான பயிற்சி

- Presentation skills
- Job interview skills
- Debate skills
- Report writing skills
- Leadership development skills
- Public speaking skills
- E-mail and business letter writing skills

(சி-3489)

அனைத்து அம்சங்களும் ஒரே பாடநெறியில்

உடனடியாக விரையுங்கள்!!!

ஆரம்பம் : 14.08.2018 மாலை 2.30 மணி

(சனி/ஞாயிறு தினங்களில் மதியம் 2.30 - 4.30 மணி வரை)

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

www.ecitycollege.lk



# மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் (லிங்கம் கூல்பார் முன்பாக) யாழ்ப்பாணம்.

Rs.300/=, Rs.500/=, Rs.1000/= மற்றும் VIP ரிக்கட்டுக்கள்.

(C-3395)

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)


## வீட்டின்...

றுள்ளது .

கட்டுடை மானிப்பாய் வீட்டுக்கு 3 மோட்டார் சைக்கிளில், சென்ற வாள் வெட்டு குழுவை சேர்ந்த 7 பேர் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வீட்டின் கண்ணாடி கதவுகளைத் தாக்கி சேதப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.